இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm I சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 29 சோபகிருது வருடம், ஆடி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(01.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 13, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st August to 31st August 2023
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

## தலிபானுடன் இலங்கை பேச்சு

# மேற்குலகம் கடும் அதிருப்தி!



நமது விசேட செய்தியாளர்

ஆப்கானிஸ்தானில் தலிபான் நிர்வாகத்தின் துணை செய்தித் தொடர்பாளரும் அதன் வெளியுறவு அமைச்சின் மக்கள் தொடர்பாடல் உதவிப் பணிப்பாளருமான ஹாபிஸ் சியா அஹமட்டுடன் இலங்கை இராஜதந்திரி ஜெயநாத் கொலம்பகே இந்தோனேஷியாவில் நடத்தியுள்ள பேச்சுவார்த்தை தொடர்பில் இலங்கையிலுள்ள மேற்குலக நாடுகள் விசனத்தை வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டுவரும் பின்னணியில் தலிபான்களுடன் நடத்தப்பட்டுள்ள... 02 பக்கம்




வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட 100 நாள் செயல்முனைவின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு மன்னார் பசார் பகுதியில் நேற்று (31) முற்பகல் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. **படப்பிடிப்பு:** *மன்னார் நகர் செய்தியாளர்*

## முருங்கனை வந்தடைந்த மலையக எழுச்சி நடைபவனி

மன்னார் நகர் செய்தியாளர்

இலங்கை வாழ் மலையக மக்கள் நாட்டுக்கு வருகைதந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அவர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் விதமாக மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட 'மாண்புமிகு மலையகம் 200' நடைபவனி நேற்று (31) மாலை முருங்கனை வந்தடைந்தது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை ஆறு மணியளவில் பேசாலையில் ஆரம்பமான நடைபவனி ஓலைதொடுவாய், எருக்கலம்பிட்டி ஊடாக முற்பகல் 11 மணியளவில் மன்னாரை வந்தடைந்தது. 02 பக்கம்



## தொழிலின்மையால் 1,266 பேர் தற்கொலை

நா. தினுஷா

நாட்டில் தொழில்வாய்ப்பின்மையினால் ஏற்பட்ட விரக்தி காரணமாக கடந்த 2022ஆம் ஆண்டில் மாத்திரம் ஆயிரத்து 266 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொழில் வாய்ப்புக்காக இடமாற்றம் வழங்கப்பட்டமையினால் 877 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு தொழில்சார்... 02 பக்கம்

### உஷ்



**ரணிலும் பெசிலும் கொழும்பு 7இலுள்ள பிரபல தமிழ் தொழிலதிபர் ஒருவரின் இல்லத்தில் சந்தித்து பேசினார்களாம்.**

**பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களை பிரிக்க வேண்டாமென ரணிலிடம் கூறினாராம் பெசில். அவர்கள் இஷ்டப்படி வந்தால் என்ன செய்வது என்று அதற்கு பதில் கேள்வியெழுப்பினாராம் ரணில்.**

**பெரமுன எம்.பிக்களை பிரித்தெடுக்கும் வேலைகளை செய்யும் நிமல் லான்சா குறித்தும் இந்த சந்திப்பில் பொரிந்து தள்ளினாராம் பெசில்.**

## பாராளுமன்றத்தை கலைக்கும் யோசனை

### சமர்ப்பிக்கத் தயாராகிறது எதிர்க்கட்சி

நா. தினுஷா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் பலத்துக்கு பயந்து பொய்க் கருத்துகளை கூறி வருகின்றன. அவர்கள் கூறுவதுபோன்று மக்கள் பலம் அவர்களுக்கு இருக்குமாக இருந்தால் உடனடியாக பாராளுமன்றத்தை கலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாராளுமன்றத்தை கலைப்பதற்கான யோசனையில் கையொப்பமிட ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அந்தக் கட்சியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற... 02 பக்கம்

## மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதி வேட்பாளர்

### பெரமுனவுடனேயே ரணில் பேச்சுக்கு வரவேண்டுமென்கிறார் ரோஹித எம்.பி.

நா. தினுஷா



**முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவோம். ரணில் விக்கிரமசிங்கவை 2029ஆம் ஆண்டுவரை பதவிக்கு நியமிக்கவில்லை. அடுத்த வருடத்துடன் அவரின் பதவிக்காலம் நிறைவடைகிறது.** 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



***இனி சிக்கன் டெவல், ப்ரைட் சிக்கன் என்று ஓடர் பண்ணும்போது எந்த நாட்டு சிக்கன் எண்டதையும் சேர்த்துச் சொல்லோணுமோ?***

## கோழி இறைச்சி இறக்குமதிக்கு அனுமதி

கோழி இறைச்சி இறக்குமதிக்கு அனுமதி வழங்க தீர்மானித்துள்ளதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ நேற்று (31) தெரிவித்தார்.

அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## ஜப்பான் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

### இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீள ஆரம்பிக்க ஆராய்வு



ஜப்பானின் அமைச்சரவை அலுவலக இராஜாங்க அமைச்சர் புஜிமாரு சடோஷி மற்றும் பிராந்திய மறுமலர்ச்சி மற்றும் கண்காணிப்பு மறுசீரமைப்புக்கான முன்னாள் இராஜாங்க அமைச்சர் யமமோட்டோ கோசோ ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (31) சந்தித்தனர். 02 பக்கம்

## நாளொன்றில் 229 பேருக்கு டெங்கு தொற்று




கே. சுபானி

நாட்டில் நாளொன்றில் சராசரியாக 229 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்படுவதாக தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு, நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 37 பேர் உயிரிழந்துள்ளதுடன் 54ஆயிரத்து 438 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை உள்ளிட்ட மேல் மாகாணத்தில்... 02 பக்கம்

## புகையிலை பயன்பாட்டில் மாணவர்கள் அதிக ஈடுபாடு

### அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை எச்சரிக்கை

நா. தினுஷா

பாடசாலை மாணவர்களிடையே புகையிலைப் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் இதனை மாணவர்கள் போதைப் பொருளாக பயன்படுத்துவதாகவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## பாகிஸ்தானில் தற்கொலை குண்டுத் தாக்குதல்

### 44 பேர் பலி: 200க்கும் மேற்பட்டோர் காயம்



07 பக்கம்

## பேராதனைப் பல்கலையில் கற்கைகளுக்கு பாதிப்பு

### விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் வெளியேற்றத்தால் சிக்கல் நிலைமை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அனுபவமிக்க விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் வெளியேறியதன் காரணமாக அந்தப் பல்கலைக்கழகத்தின் பல பீடங்களில் அன்றாடக் கற்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2022 ஜனவரி முதல் இந்த ஆண்டு மே வரை 70க்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தரும் ஊடகப் பேச்சாளருமான பேராசிரியர் டபிள்யூ.எம்.டெரன்ஸ் மதுஜித் இது குறித்து தெரிவிக்கையில்,... 02 பக்கம்

## சுகாதார தொழிற்சங்கங்கள் அடையாள வேலைநிறுத்தம்

### சுற்றறிக்கைக்கு எதிராக ஓக.03இல் மேற்கொள்ளத் தீர்மானம்

அமைச்சின் அனுமதியின்றி சுகாதார சேவையாளர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதைத் தடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிராக நாளை மறுதினம் வியாழக்கிழமை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அந்த சுற்றறிக்கையை மீளப் பெறுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற போதிலும் சுகாதார அமைச்சு எவ்வித பதிலும் வழங்கவில்லை.

இந்நிலையில், ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்ததாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## 65 வகையான மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கம்

நாட்டில் மருந்துகளில் ஏற்பட்ட தரம் தொடர்பான பிரச்சினை காரணமாக இவ்வாண்டு முதல் ஏழு மாதங்களில் 65 வகையான மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க ஊடகங்களுக்கு இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். 02 பக்கம்









ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் இடம்பெறும் ஊழல்களை உடனடியாக நிறுத்துமாறு கோரி தேசிய மக்கள் சக்தியினால் ஒழுங்கு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (31) கொழும்பு ,கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது. **படப்பிடிப்பு:** ஏஷான் தஸநாயக்க

# ஏழு மாதங்களில் 7.5 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை

நடப்பாண்டின் ஜனவரிமுதல் ஜூலை 27ஆம் திகதிவரையான 7 மாத காலப்பகுதிக்குள் 7 இலட்சத்து 48 ஆயிரத்து 377 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை கடந்தவருடத்துடன் ஒப்பிடுகையில் 4 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலாப்பயணிகள் வருகைத் தந்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 27ஆம் திகதிவரையான 7 மாத காலத்துக்குள் 7 இலட்சத்து 48 ஆயிரத்து 377 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர்.

அந்தவகையில் இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் நான்கு மாத காலப்பகுதிக்குல் ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்திருந்த நிலையில் ஜூலை முதலாம் திகதி முதல் 27ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் ஒரு இலட்சத்து 23ஆயிரத்து 508 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர்.

அதன்படி நாளொன்றுக்கு சராசரியாக 4 ஆயிரத்து 574 சுற்றுலாப் பயணிகளும் வாரத்துக்கு 30ஆயிரத்து 877 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகைத் தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# லங்கா பிறீமியர் லீக் ஆரம்ப விழாவில் தேசிய கீதம் தவறாக பாடப்பட்டுள்ளது

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் விதுர எச்சரிக்கை

லங்கா பிறீமியர் லீக் ஆரம்ப விழாவில் பிரபல பாடகி உமாரா சிங்கவன்ச தேசிய கீதத்தை இசைக்கும் போது தவறாக பாடியுள்ளமைக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரபல பாடகி உமாரா சின்ஹவன்ச, கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்ற லங்கா பிறீமியர் லீக் ஆரம்ப விழாவில் தேசிய கீதத்தைப் பாடும் போது ஒரு முக்கியமான வரியை தவறாக உச்சரித்த காணொளி சமூக ஊடகங்களில் விவாதப்பொருளானது.

குறித்த காணொளியில், அவர் 'நமோ நமோ மாதா' என்பதற்குப் பதிலாக 'நமோ நமோ மாஹதா' என்று மீண்டும் மீண்டும் பாடுவது பதிவாகியுள்ளது. இதனால் இணையத்தில் சர்ச்சைக்குள்ளானது. இதன் விளைவாக அனைத்து சமூக ஊடக தளங்களிலும் "மஹதா" #Mahatha # என்ற ஹேஷ்டேக் தற்போதைய டிரெண்டிங்கில் உள்ளது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,

எந்தவொரு நாட்டின் தேசிய கீதமும் அந்நாட்டின் அடையாளத்தையும் கலாசாரத் தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதால் அதை யாரும் சிதைக்க முடியாது. எனவே, தேசிய கீதம் சிதைக்கப்படும் இதுபோன்ற சம்பவங்களை மன்னிக்க முடியாது. ஒரு தேசிய கீதத்தை ரீமிக்ஸ் செய்யவோ அல்லது ரொப் இசையாக பாடவோ முடியாது. எனவே, அண்மையில் நடந்த சம்பவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அமைச்சகம் ஆலோசித்து வருகிறது. மேலும், இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

மேலும், தேசிய கீதத்தைப் பாடுவதற்கு ஒரு முறையான வழிமுறை உள்ளது. அந்த பதிப்பு யூடியூபில் இருக்கிறது. இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் நிர்வாணமாக நின்று தேசிய கீதம் இசைக்கப்பட்டாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை" என குறிப்பிட்டார்.

### தலிபானுடன் இலங்கை...

பேச்சுகள் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் ஜூலை மாதம் 14 ஆம் திகதி அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதுவர், ஓய்வுபெற்ற வைஸ் எட்மிரல் ஜெயநாத் கொலம்பகே தலிபான்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

ஜகார்த்தாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இலங்கையின் தேசிய கொடி பின்புலமாக காட்சிப்படுத்தப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதால் அதனை உத்தியோகபூர்வ சந்திப்பாக கருதியுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கை மீது அதிருப்தி கொண்டுள்ளதாக அறியமுடிந்தது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மௌனம் காத்து வருகிறது.

மேலும், ஜெயநாத் கொலம்பகே தலிபான்களுடன் சந்திப்பு நடத்துவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்திடம் அனுமதி பெறவில்லையென தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி தலிபான்கள் நிர்வாகத்தை கைப்பற்றினர். அதனையடுத்து காபூலில் இருந்த தூதரகத்தை இலங்கை அரசாங்கம் தற்காலிகமாக மூடியமை குறிப்பிடத்தக்கது.

### பேராதனை பல்கலையில்...

"பல ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி வெளிநாடு சென்றுள்ளனர். இந்நிலைமை மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் பல் மருத்துவ பீடங்களையே பிரதானமாக பாதித்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் முதல் இவ்வருடம் மே மாதம் வரையான 16 மாதங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னணி விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் 70 பேர் பல்கலைக்கழகத்தை முழுமையாக விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். ஏராளமானோர் உயர் கல்விக்காக வெளிநாடு சென்றுள்ளனர்" என பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் மேலும் தெரிவித்துள்ளார்.

### பாராளுமன்றத்தை...

உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (31) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய நாட்களில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி என்பவற்றின் மேடைகளில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. 70 சதவீதமான தொகுதிக் கூட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் அடுத்த தேர்தலில் தமக்கே நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்காலம் பற்றியதான எதிர்வு கூரல்களை வெளியிட்டு வருகின்றது. தேசிய மக்கள் சக்தியினர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோருகிறார்கள்.

யார் என்ன கூறினாலும், பாராளுமன்றத்திலுள்ள பெரும்பாலான உறுப்பினர்களுக்கு மக்கள் விருப்பு இல்லை. இவர்கள் கூறுவது போன்று தொகுதிக் கூட்டங்கள் நிறைவடைந்து அவர்களின் வேட்பாளர்களை தயார் செய்துவிட்டார்கள் என்றால் இந்த ஏற்பாடுகள் எதுவும் எமக்கு அவசியமில்லை. பாராளுமன்றத்தை கலைக்க முடியும். அவர்கள் கூறுவது போன்று 70 சதவீத தொகுதிக் கூட்டங்கள் நிறைவடைந்துவிட்டன என்றால் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு அவர்கள் கைச்சாத்திட வேண்டும். அதற்கு கைச்சாத்திட நாங்களும் தயாராக இருக்கிறோம்.

பாராளுமன்றத் தேர்தலை நடத்தினால் இவர்களின் நிலைப்பாடுகள் எவ்வாறு இருக்கிறது,மக்களின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இன்று என்றாலும் பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பான கடிதத்தில் கைச்சாத்திட நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைவிட்டுவிட்டு பொய் பேச்சுக்களை பேசக்கூடாது.

மக்கள் பலத்துக்கு பயந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான பணத்தை கொடுக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவுமே சூழ்ச்சி செய்துவருகிறது. அவ்வாறு இருக்கையில், தொகுதிகளுக்கு சென்று 50 – 100 இணைத்துக்கொண்டால் வெற்றியடைந்து விடலாம் என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

### ஜப்பான் பிரதிநிதிகளுடன்...

ஜப்பானிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் இந்நாட்டில் அமுல்படுத்தப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மக்களுக்குப் பயன்தரும் வகையில் மீள ஆரம்பிப்பது தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை நிறைவடைந்த பின்னர் குறித்த திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் ஆரம்பிக்க இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்ததுடன், இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரக அதிகாரிகளை இணைத்து இது தொடர்பான திட்டங்கள் குறித்து ஆராயவும் முடிவு செய்யப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உள்ளிட்ட தூதுக் குழுவினர், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### சுகாதார தொழிற்சங்கங்கள்...

போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள அன்றைய தினம் விசேட மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் சுகாதார நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் துறையுடன் இணைந்த சிவில் அமைப்புகள் கலந்துகொள்ளவுள்ளன.

### 65 வகையான மருந்துகள்...

இவ்வாறு பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட மருந்துகளில் இந்திய கடன் உதவித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்து வகையொன்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆறு வகையான மருந்துகளும் உள்ளடங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### முருங்கனை வந்தடைந்த...

அதனைத் தொடர்ந்து மலையக மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிகழ்வு மன்னார் வாழ் மக்களின் பங்குபற்றுதலுடன் பிற்பகல் மூன்று மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்று மூன்றாம்நாள் நிகழ்வுகள் நிறைவடைந்தன. அதனைத் தொடர்ந்து நான்காவது நாளான நேற்றுக் காலை ஐந்து மணியளவில் மன்னார் கரிட்டாஸ் வாழ்வுதயத்திலிருந்து ஆரம்பமான நடைபவனி தள்ளாடி, உயிலங்குளம் ஊடாக முருங்கனை வந்தடைந்தது. இந்த நடைபவனியில் மதபோதனைகள், மலையக மக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்ட இளைஞர், யுவதிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நாளொன்றில்...

இதுவரையான ஏழு மாத காலப்பகுதிக்குள் 27 ஆயிரத்து 980 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாடுமுழுவதும் தற்போது மழையுடன்கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பொதுமக்கள் நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என எச்சரிக்கப்படுகிறது.

இந்நிலையில் சுகாதார அமைச்சின் தேசிய டெங்குநோய் கட்டுப்பாட்டுப்பிரிவு நேற்று (31) வெளியிட்டுள்ள அறிக்கையில்,நாடுமுழுவதும் 52 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், கடந்த ஜூலை மாதம் மாத்திரம் டெங்கு பாதிப்புக்குள்ளான 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 7ஆயிரத்து 118 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்வருடத்தில் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31 வரையான 7 மாதங்களில் 56ஆயிரத்து 438 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 8ஆயிரத்து 963 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் பெப்ரவரியில் 6ஆயிரத்து 709 பேரும் மார்ச்சில் 6ஆயிரத்து 419 பேரும் ஏப்ரலில் 7ஆயிரத்து 617 பேரும் மே இல் 9ஆயிரத்து 696 பேரும் ஜூனில் 9ஆயிரத்து 916 பேரும் ஜூலையில் 7ஆயிரத்து 118 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட மேல் மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கம்பஹாவில் 12ஆயிரத்து 203 பேரும் கொழும்பில் 12ஆயிரத்து 150 பேரும் களுத்துறையில் 3ஆயிரத்து 627 பேரும் என மேல் மாகாணத்தில் 27ஆயிரத்து 980 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று மத்திய மாகாணத்தில் 5ஆயிரத்து 1194 பேரும் வடமேல் மாகாணத்தில் 4ஆயிரத்து 919 பேரும் சப்ரகமுவ மாகாணத்தில் 4ஆயிரத்து 544 பேரும் மட்டக்களப்பு திருகோணமலை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் 5ஆயிரத்து 722 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### மஹிந்த ராஜபக்ஷவே...

ரணிலுக்கு தொடர்ந்து பதவியிலிருக்கும் விருப்பம் இருந்தால் பொதுஜன பெரமுனவுடனேயே அவர் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அவ்வாறு இல்லாமல், அவர் ஒவ்வொரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி நோக்கத்தை இழந்துவிடக் கூடாது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

2024 ஆம் ஆண்டு மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் மேடைக்கு அழைத்து வருவோம். மக்களை போன்று நாங்களும் தற்போதுவரையில் மஹிந்தவை நேசிக்கிறோம். 2015 ஆம் ஆண்டுடன் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. மைத்ரிபால சிறிசேன வெற்றியடைந்தார். ஒரு அமைச்சுக்கு பதிலாக இரு அமைச்சுக்கள் தருவதாகவும் தன்னுடன் இணையுமாறும் மைத்ரிபால சிறிசேன எங்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், அதற்கு அஞ்சவில்லை. யுத்தத்தை வென்று எமது உரிமைகளை மீண்டும் வென்றெடுத்து கொடுத்ததை போன்று, மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியிலும் அவருடனேயே நாங்கள் பயணித்தோம்.

அன்றுபோல் இன்றும் எங்களிடம் அந்த சுய கௌரவம் இருக்கிறது. 2015 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியை சந்தித்திருந்தாலும் அதன் பின்னர் வந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்றோம். இருந்தாலும் எங்கள் மீது குற்றச்சாட்டு முன்வைத்தார்கள். போராட்டத்தால் எங்களின் சொத்துக்களை இழந்தோம். இருந்த போதும் ஒருசில மாதங்களில் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது.

தற்போதே தவறுகள் புரிகிறது. தவறுகளை உணர்ந்திருந்தாலும் நடக்கவேண்டியது சகலதும் முடிவடைந்துவிட்டன. 2004 ஆம் ஆண்டு பல்வேறு நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலும் பாதுகாப்பு இல்லாத நிலைமையிலுமே நாட்டை மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தோம். இருந்தபோதும் தனது கடமையை நிறைவேற்றும் நோக்கிலேயே நாட்டை பொறுப்பேற்றார். அவரின் கடமையை முறையாக நிறைவேற்றினார்.

தமிழ் மக்களை கொன்றொழித்தார்கள். யாழ்ப்பாணம் நூலகத்தை தீயிட்டு அழித்தார் கள். இந்த அத்தனை இழப்புகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்புக்கூற வேண்டும். தொடர்ச்சியான கடன்களினாலேயே தற்போது கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இருந்தபோதும், போராட் டகாலத்தில் ஏற்பட்ட கடன் மீள்செலுத்துகையில் ஏற்பட்ட காலதாமதத்துக்கும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். அதுமட்டுமல்லாமல், 30 வருடகால யுத்தத்தை வெற்றிகொள்வதற்காக ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக கூட இந்த கடன்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இந்த அழிவுக்குக் காரணம் யார் என்பதற்கு ஒவ்வொருவரினதும் மனச்சாட்சியே பதிலளிக்க வேண்டும். நான் என்றுமே மஹிந்த ராஜபக்ஷவுடனேயே இருப்பேன். பொதுஜன பெரமுனவைத் தவிர எனக்கு வேறு எந்தக் கட்சியும் இல்லை.

சுதந்திரக் கட்சியிலிருந்து விலகியதற்கான இலக்கை நாங்கள் இன்று அடைந்துள்ளோம். எங்களின் கடமையையும் பொறுப்பையும் நிறுவேற்ற முடியும். அதேபோன்று, சட்டத்தை பாதுகாத்து கொடுத்ததற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பகிரங்கமாக நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். ஆனால், 2024 ஆண்டு வரையில் மாத்திரமே அவரை ஜனாதிபதியாக நியமித்திருக்கிறோம். 2024 முதல் 2029 ஆம் ஆண்டு வரை ரணிலை ஜனாதிபதியாக நியமிக்கவில்லை.

பொதுஜன பெரமுனவின் பாதுகாப்பில் இருந்துகொண்டே சிலர், இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியுமா என்று முயற்சிக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஜனாதிபதியாகும் நோக்கம் இருந்தால், அவர் பொதுஜன பெரமுனவுடன் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். ஒவ்வொரு பிரிவுடனும் பேசி நோக்கத்தை இழந்துவிட வேண்டாம் என்றும் தெளிவாக கூறிக்கொள் கிறோம் என்றார்.

### தொழிலின்மையால்...

பிரச்சினைகளின் காரணமாக 71 வயதுக்கு மேற்பட்ட 448 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் கடந்த வருடம் அதிக எண்ணிக்கையிலான ஆண்களே தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் அந்த வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழில் நிலைமை அல்லது தொழில் வாய்ப்புகளின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 3,406 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளதுடன் இவர்களுள் 2,045 ஆண்கள் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண் டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர்களில் 2,832 பேர் ஆண்கள் என்பதுடன் 574 பெண்களும் உள்ளடங்குகின்றனர். குறிப்பாக துறைசார் பணியாளர்களில் 59 பேரும் நிர்வாகத் துறையை சேர்ந்த 13 பேரும் வர்த்தக துறையை சேர்ந்த 200 பேரும் சேவைப்பிரிவைச் சேர்ந்த 80 பேரும் விவசாயத் துறையைச் சேர்ந்த 477 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

அதேவேளை, 08 தொடக்கம் 16 வயது பிரிவைச் சேர்ந்த 85 பேரும் 17 தொடர்க்கம் 20 வயது பிரிவைச் சேர்ந்த 210 பேரும் 21 முதல் 25 வயதுப் பிரிவைச் சேர்ந்த 331 பேரும் 26 முதல் 30 வயது பிரிவைச் சேர்ந்த 305 பேரும் 30 முதல் 35 வயது பிரிவைச் சேர்ந்த 259 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, இவ்வாறு உயிரிழந்தவர்களுள் அநேகமானவர்கள் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளனர். கடந்த வருடத்தில் தற்கொலை செய்துகொண்டவர்களில் 2,639 பேர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அவர்களுள் 335 பேர் பெண்கள் என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தற்கொலை செய்துகொள்வது தவறான தீர்மானமாகும். உளவளம் தொடர்பில் அவசர உதவிகள் தேவைப்படுமாயின் சுகாதார அமைச்சின் 1929 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.)

### புகையிலை பயன்பாட்டில்...

இதேவேளை, நடப்பாண்டில் ஐஸ் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் இதுவரையான காலப்பகுதியில் 50 ஆயிரம் வரையானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அந்தச் சபையின் தலைவர் சட்டத்தரணி ஷாகய நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (31) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மெலும் தெரிவிக்கையில்,

நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதியில் 50 ஆயிரம் வரையான ஐஸ் போதைப்பொருள் பாவனையாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். ஆனால், 18 வயது அல்லது அதற்கு குறைவானவர்கள் கைதுசெய்யப்படுவதில்லை.

இருந்தபோதும், 30 இலட்சம் வரையானவர்கள் புகையிலை சார் தயாரிப்புக்களை பயன்படுத்துகிறார்கள். பாடசாலைக் கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் அநேகமான சந்தர்ப்பங்களில் புகையிலையை அவர்களின் வீடுகளிலேயே தயார்படுத்தி, அதனை பயன்படுத்துவதனூடாக போதையடையும் நிலைமையை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இதனை பெற்றோரால் சோதனை செய்து பார்க்க முடியும். உதட்டின் மேல் கீழ் பகுதிகள், வாய் உற்பகுதியின் வலது, இடது புறங்கள் வெள்ளை நிறமாக இருக்குமாக இருந்தால் அவர் புகையிலையை போதைப்பொருளாக பயன்படுத்த அடிமையாகியுள்ளார்கள் என்பதை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த புகையிலை பாவனையே நாளடைவில் ஹெரோயின், ஐஸ் போன்ற போதைப்பொருளை பயன்படுத்துவதற்கு பிரதான காரணியாக மாறுகின்றது.

இதேவேளை, இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 389 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 32,361 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்த காலப்பகுதியில் 32.7 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 10, 757 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எமது நாட்டில் குறுகிய 3 வருட காலப்பகுதியில் ஏனைய போதைப்பொருட்களை போன்று ஐஸ் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் போதைப்பொருள் பாவனையில் அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், இந்த வருடத்தில் ஐஸ் போதைப்பொருளில் பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த போதைப்பொருளுடன் கைதுசெய்பவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

# தரம் குறைந்த மருந்துப் பொருட்கள்: எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஆராய்வு!

## மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கு விஜயம்



பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நேற்று (31) காலை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கு விஜயம் செய்தனர்.

நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு,தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்வது குறித்தும்,சில நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப சுகாதார அமைச்சு செயற்படுவது குறித்தும் இதன்போது கேள்வி எழுப்பினர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் பொறுப்புநிலை வாய்ந்த ஒருவரைச் சந்தித்து இது தொடர்பான தகவல்களைப் பெற முயற்சிக்கப்பட்டாலும், அந்த நேரத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் பிரதம நிறைவேற்று அதிகாரியோ அல்லது தவிசாளரோ இல்லாததால், அதற்கான வாய்ப்பைப் பெற முடியாது போனது.

எவ்வாறாயினும்,குறித்த தருணத்தில் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல,எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து,இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

## மின்சார பஸ்கள் இறக்குமதிக்கு போக்குவரத்து அமைச்சு அனுமதி




50 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வதற்கு போக்குவரத்து அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் மின்சார பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

மின்சார பஸ்களை இறக்குமதி செய்யப்படும் வரை 50 சொகுசு பஸ்கள் இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தீவனத்துக்கும் பியர் தயாரிப்புக்களுக்கும் அரிசியை பயன்படுத்துவதை தவிருங்கள்

## விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை



விலங்குத் தீவனம் மற்றும் பியர் தயாரிப்புகளுக்கு அரிசியை பயன்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி, விலங்கு தீவனத்துக்கும் பியர் தயாரிப்புக்களுக்கும் அரிசி பாவனை இடைநிறுத்தி அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

சில பிரதேசங்களில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எதிர்காலத்தில், ஏற்படக்கூடிய உணவுத் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில்

# சமஷ்டி தீர்வை கோரிய ஜனநாயகப் போராட்டம்






கல்லடி செய்தியாளர்

நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய 100 நாள் செயல்முனைவின் ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு தழுவிய ஜனநாயகப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை (31) மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இப்போராட்டம், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்வைத்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதி செய்யக்கோரி முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணியானது மட்டக்களப்பு காந்தி சிலை வரை சென்று, மீண்டும் படுகொலை செய்யப்பட்டு உயிர் நீத்த ஊடகவியலாளர்களின் நினைவுதூபி வரை சென்றது.

இதன்போது, ''சமஷ்டியே எங்களுக்கு தீர்வு, வேண்டும் வேண்டும் சமஷ்டி வேண்டும், சமஷ்டியே எங்கள் அரசியல் தீர்வு'' போன்ற கோஷங்களை எழுப்பியதுடன், பேரணியின் இறுதியில் மக்கள் பிரகடன நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் இடம்பெற்ற இப்போராட்டத்தில், சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மைத்ரியின் வழக்கிலிருந்து நீதியரசர் இத்தவெல விலகல்

தனக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டை வலுவிழக்கச் செய்து ரிட் ஆணையை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்யும் ஐவரடங்கிய நீதிபதிகள் குழாமில் நீதியரசர் ஒருவர் விலகுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நேற்று அறிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, இந்த மனுவை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய நீதிபதிகள் குழாமின் உறுப்பினரான நீதியரசர் நீல் இத்தவெல இந்த வழக்கிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளதாக தலைமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மன்றுக்கு அறிவித்தார்.

அதன்படி, உரிய வெற்றிடத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி. என். சமரக்கோன் பெயரிடப்படுவதாகவும் தலைமை நீதியரசர் அறிவித்தார்.

இதன்படி, நிஷங்க பந்துல கருணாரத்ன, சோபித ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, தம்மிக்க கனேபொல மற்றும் டி. என். சமரகோன் உள்ளிட்ட ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16, 17, 18 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு அன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுத் தகவல் கிடைத்த போதிலும் அதனை தடுக்காமை ஊடாக குற்றவியல் கொலை மற்றும் பிற குற்றச் செயல்களின் கீழ் அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட இருவரினால் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை பரிசீலித்த கோட்டை நீதவான், பிரதிவாதி மைத்ரிபால சிறிசேனவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுத்தார்.

இந்த அழைப்பாணை சட்டவிரோதமானது என்றும் அது தொடர்பான தனிப்பட்ட முறைப்பாட்டை வலுவிழக்கச் செய்து ரிட் ஆணையை பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மைத்ரிபால சிறிசேன மனுத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனி செல்ல நினைத்த இளைஞர்களின் கனவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கலைந்தது!

போலிக் கடவுச்சீட்டு மற்றும் விமானச் சீட்டுகளைப் பயன்படுத்தி ஐரோப்பாவுக்குச் செல்ல முயன்ற 5 இளைஞர்கள், நேற்று திங்கட்கிழமை (31) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்களுள் ஒருவர் புத்தளம் பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடையவராவார். இவருடன் யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் நான்கு இளைஞர்கள் ஜேர்மனிக்கு செல்ல முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்களால் வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசோதித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், அவர்களிடம் காணப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் விமான டிக்கெட்டுகள் போலியானவை என்பதை கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



**மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட இருட்டிச் சோலைமடு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் சிவமுத்து மாரியம்மன் ஆலய புகழ் பாடும் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இறுவட்டை பெற்றுக்கொண்டார்.**

**படப்பிடிப்பு:** குருக்கள்மடம் செய்தியாளர்

# முல்லைத்தீவு அக்கரைவெளி காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ். பல்கலை மாணவர்கள் போராட்டம்





முல்லைத்தீவு – அக்கரைவெளி காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று மாலை 4 மணியளவில் ஒன்று கூடிய பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.இதன்போது மகாவலி அபிவிருத்தித் அதிகார சபையே நிலங்களை அபகரிக்காதே, எமது நிலம் எமக்கு வேண்டும் உட்பட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

# ராஜகிரிய விபத்து: சம்பிக்க மீதான வழக்கு ஒத்திவைப்பு



2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்ல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க நீதிமன்றில் ஆஜராகியபோது, இந்த வழக்கின் அடிப்படையான இதேபோன்ற மற்றுமொரு வழக்கு தொடர்பாக தனது கட்சிக்காரர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற விசாரணைகளை இடைநிறுத்துவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளதாக சட்டத்தரணி தெரிவித்தார்.

குறித்த வழக்கு தொடர்பில் பிரதிவாதி மேன்முறையீட்டு நீதிமன்றில் மற்றுமொரு மேன்முறையீட்டையும் தாக்கல் செய்துள்ளதாக சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

உண்மைகளை கருத்திற்கொண்ட கொழும்பு உயர் நீதிமன்றம் வழக்கை 2023 செப்டெம்பர் 23 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் தனது ஜீப் வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# காத்தான்குடியில் ஆடு கையளிப்பு



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள கிராமியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டம் மாவட்டத்தில் பரவலாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், காத்தான்குடி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு ஆடுகள் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதரின் ஆலோசனைக்கிணங்க, உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ்.சில்மியா தலைமையில் செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவின் 167A, 167B ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த இரு பயனாளிகளிடம் தலா மூன்று ஆடுகள் வீதம் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.டி. எம்.மாஹிர், பிரிவுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.எம்.இர்ஷாத், கலீல்தீன், திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்களான எம்.ஏ.எம்.நளீம், ராதிகா கோமதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** தொழில் - வியாபாரத்தில் அதிக லாபங்களை அடைவீர்கள். நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**ரிஷபம்:** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**மிதுனம்:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**கடகம்:** எதிர்பாராத வகையில் உங்கள் புகழ்,அந்தஸ்து உயரப் போகின்றது.அரச வகையில் லாபம் உண்டு.

**சிம்மம்:** கலங்கிப் போயிருந்தமனம் ஆறுதல் அடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது நல்லதையே நினையுங்கள்.

**கன்னி:** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**துலாம்:** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**விருச்சிகம்:** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**தனுசு:** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**மகரம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கும்பம்:** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைப்படும் நாள்.

**மீனம்:** அரசாங்க வகையில்பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனை களை ஏற்பீர்கள்.

**திதி :** பௌர்ணமி பி.இ.12.01 வரை பின் பிரதமை
**நட்சத்திரம் :** உத்திராடம் பி.ப.4.03 வரை பின் திருவோணம்
**யோகம்:** சித்த யோகம்; பி.ப 5.26 வரை பின் மரண யோகம்
**வார சூலை :** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 8.04– 9.04 மணி வரை
**ராகுகாலம்:** 3.04 – 4.34 மணி வரை
**எமகண்டம் :** 9.04–10.34 மணி வரை
**குளிகை :** 12.04– 1.34 மணி வரை
**சந்திராஷ்டமம் :** மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம் :** பரணி,பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம் :** பௌர்ணமி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 01ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஊடகர்கள் போராடக்கூடாதா?

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர பொலிஸாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சம்பவத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டதாகத் தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, வழக்குடன் தொடர்புடைய அனைவரையும் விசாரணைக்கு அழைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

உடுவரகெதர கைது செய்யப்பட்டு பொரளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று நிலையத்துக்குச் சென்று அவரது உடல்நிலை குறித்து விசாரித்ததாக தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழு பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைச் சந்தித்து , ஜீப்பில் வைத்து பொலிஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் உடுவரகெதரவை நீதித்துறை வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்கு அனுப்புமாறு பரிந்துரைத்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் தரப்பினரிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களையும் விசாரணைக்கு அழைக்கும்" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உடுவரகெதர கருத்துத் தெரிவிக்கையில், தனது உடல்நிலையை கண்டறிய மேலும் பரிசோதனை முடிவுகள் வரும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

"எனது வலது கண் பரிசோதனையின் அறிக்கை இன்னும் வரவில்லை. அதன் முடிவுகளின் அடிப்படையில் மருத்துவர்கள் முடிவெடுப்பார்கள் " என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை பொரளையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த உடுவரகெதர, பொலிஸாரால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

தரிந்து பிரபலமான ஊடகர்.அரசியல் ரீதியான தகவல்களை மக்களுக்கு வழங்குவதில் அவர் பிரதான இடத்தைப் பிடித்துள்ள ஒருவராக கருதப்படுகிறார். ஊடகத்துறையில் உள்ள அப்படியான ஒருவர் அரசிடம் நியாயம் கேட்கும் போராட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்று ஏதேனும் சட்டம் இருக்கிறதா ? அல்லது போராட்டங்களில் இருந்து ஊடகர்கள் விலகி இருக்க வேண்டும் என்று அரசாங்கம், காவல் துறை கருதுகிறதா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சுதந்திர ,ஜனநாயக மாண்புகளை எவ்வாறு இரும்புக்கரம் கொண்டு அடக்குகிறது என்பதற்கு தரிந்துவின் கைது மிக அண்மைய உதாரணம்.போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை செய்ய இடமளித்தால் அல்லது ஊடகர்கள் அவற்றை சமூகமயப்படுத்த முயன்றால் எங்கே கோட்டாபயவுக்கு நடந்ததுதான் தனக்கும் நடந்துவிடுமோ என்று ரணில் அச்சப்படுவது அப்பட்டமாக தெரிகிறது. தரிந்துவின் கைதும் காவல்துறை அதிகாரிகள் நடந்துகொண்டவிதமும் அதனையே உரைத்துநிற்கின்றன.


ஊடகர்கள் மீதான அடக்குமுறை இலங்கையில் இன்று நேற்று நடப்பதல்ல.ஒரு காலத்தில் தமிழ் ஊடகர்கள் மீது பாய்ந்த கொடுஞ் சட்டங்கள் இன்று சகோதர சிங்கள ஊடகர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கின்றன.அதிலும் அரச அடிவருடிகளாக இல்லாத சுயாதீன ஊடகர்கள் ,எந்த பாதுகாப்புமின்றி வருவது வரட்டும் என்று செயற்பட தொடங்கியிருப்பதால் அந்த துணிச்சலை கண்டு அச்சம் கொண்டுள்ளது ரணில் அரசு. எனவே தரிந்துவை கைது செய்ததன் மூலம், அடக்கி வாசியுங்கள் என்ற தகவல் ஊடகத்துறைக்கு மறைமுகமாக சொல்லப்பட்டுள்ளதாகவே அர்த்தப்படுகிறது.

ஒரேயொரு எம்.பி பதவியில் வந்து இவ்வாறு சட்டத்தை கையிலெடுக்கும் ரணில் , அடுத்த வருட ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மக்கள் ஆதரவு கொண்ட ஜனாதிபதி என்று கூறிக்கொண்டு அரியணையில் அமர்ந்தால் நாட்டின் கொடுங்கோல் நிர்வாகத்துக்கு பஞ்சம் இருக்காது. காலிமுகத்திடல் போராட்டம் ஜனநாயகமானது. அது தொடரப்படவேண்டும் என்றும் ஊடக சுதந்திரத்தை காப்பேன் என்றும் மூச்சுக்கு முன்னூறு தடவை சொல்லும் ரணில் இப்போது அடக்கி ஆள நினைப்பது அவரின் உண்மையான முகத்தை காட்டுகிறது.

தரிந்துகளை கைது செய்வதால் மக்களுக்கான குரல் நின்றுவிடாது. இதன்பின்னர் ஆயிரம் தரிந்துக்கள் வரலாம். ஆனால் இனிமேலும் ஒரு ரணில் வர மக்கள் அனுமதிப்பார்களா என்பதை நோக்க வேண்டியிருக்கிறது. ரணில் பட்டறிவில் பாடம் கற்கவில்லை.ஆனால் வெகுவிரைவில் அவர் கற்பதற்கு அதிகளவான சாத்தியம் இருப்பதாகத் தெரிகிறது.



# கரப்பான் பூச்சிகள் உங்கள் வீட்டுக்குள் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?



கொசு, உண்ணி போன்ற பிற பூச்சிகளைப் போல் கரப்பான் பூச்சிகள் நோய்களைப் பரப்புவதில்லை. நமது இரத்தத்தைக் குடிப்பதோ உடலிலுள்ள தோலைச் சாப்பிடுவதோ கிடையாது.

**கரப்பான் பூச்சிகள்**

நம்மில் பெரும்பாலானவர்களுக்கு அதனுடனான முதல் அனுபவம், மறக்கமுடியாத, கிட்டத்தட்ட மோசமான அனுபவமாகவே இருந்திருக்கும். எனக்கும் அது மோசமாகவே இருந்தது. அப்போது எனக்கு 5 அல்லது 6 வயது இருக்கும். வீட்டின் சமையலறையில் இருந்த ஏதோவொரு பொருளை எடுத்தபோது, அதற்குப் பின்னால் ஒட்டிக்கொண்டிருந்த கரப்பான் பூச்சி பறந்துவந்து என் கழுத்தில் ஒட்டிக்கொண்டது.

பயந்து அலறியபடி கையில் இருந்த கண்ணாடி போத்தலை தவறவிட்டேன். அது கீழே விழுந்து உடைந்தது. அதற்கு முன்புகூட நான் கரப்பான் பூச்சியை பார்த்திருக்கக் கூடும். ஆனால், அதை நேருக்கு நேர் எதிர்கொண்டது அப்போதுதான்.

பிறகு கரப்பான் பூச்சி என்றாலே ஒருவித அருவருப்பும் கூடவே தொற்றிக்கொண்டது.

வீட்டின் அருகில் இருக்கும் அண்ணன்கள் கரப்பான் பூச்சியை, அதன் மீசையைப் பிடித்து தூக்கி விளையாடுவதைப் பார்த்திருக்கிறேன்.

அதைப் பார்த்து சிறிது தைரியம் வந்து அதைக் கையில் எடுக்க முயன்றாலும் கரப்பான்களின் உருவ அமைப்பு, எதிர்பார்க்காத நேரத்தில் பறந்து வந்து நம் மேலே ஒட்டிக்கொள்வது போன்றவற்றால், கரப்பான் பூச்சிகள் மீதிருந்த அருவருப்பு உணர்வும் அச்சமும் நீங்கப் பல ஆண்டுகள் ஆகின.

கரப்பான் பூச்சி மீது பயம் அல்லது அருவருப்பு கொள்வதை கட்சரிடாபோபியா (katsaridaphobia) என்று அழைக்கின்றனர்



சொல்லப்போனால், கரப்பான் பூச்சிகளைப் பார்த்து மனிதர்கள் பயப்படுவதில் அர்த்தமே இல்லை என்று இப்போது தோன்றுகிறது.

கொசு, உண்ணி போன்ற பிற பூச்சிகளைப் போல் கரப்பான் பூச்சிகள் நோய்களைப் பரப்புவதில்லை. நமது இரத்தத்தைக் குடிப்பதோ உடலிலுள்ள தோலைச் சாப்பிடுவதோ கிடையாது.

நம் இரத்தம் குடித்து நோய்களைப் பரப்பும் உலகின் ஆபத்தான உயிரினமாக இருக்கும் கொசுவை பார்த்துக்கூட நாம் இந்தளவுக்கு அலறுவதில்லை.

ஆனால், கரப்பான் பூச்சியை பார்த்துவிட்டால் போதும், எங்கிருந்துதான் அத்தகைய பயமும் அருவருப்பும் வருகிறதோ?

**கரப்பான் பூச்சி மீதான அருவருப்புக்கு என்ன காரணம்**



பொதுவாக மிகவும் அசுத்தமான சூழ்நிலையில் தனது வாழ்வியலை அவை அமைத்துக் கொள்வது அவற்றின் மீது ஏற்படும் அருவருப்புக்கு ஒரு காரணம் என்று கூறுகிறார் ஆரண்யா சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் ஆய்வாளர் ப்ரோனொய் வைத்யா.

கரப்பான் பூச்சியின் மலம், தோல், உடல் பாகங்களில் காணப்படும் ஒரு புரதம் மனிதர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது

"கரப்பான் பூச்சிகள் பொதுவாக அசுத்தமான இடங்கள், குப்பைகள் நிறைந்த இடங்கள், கழிவறை போன்ற இடங்களில் அதிகமாக இருக்கின்றன. இதன் காரணமாகவே அதன் மீது ஓர் அருவருப்பு தோன்றிவிடுகிறது" என்கிறார் அவர்.

கரப்பான் பூச்சிகள் நோயைப் பரப்புகின்றன என்ற அச்சம் பண்டைய கிரேக்க காலத்தில் இருந்தே உள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

"பண்டைய கிரேக்கர்களின் காலத்தில் ஒரு நோய் பரவியது. கரப்பான் பூச்சிதான் இதற்குக் காரணம் என்ற அச்சம் அவர்களிடம் ஏற்பட்டது. கரப்பான் பூச்சிகள் உடலில் ட்ரோபோமயோசின் என்ற புரதம் உள்ளது.

கரப்பான் பூச்சியின் மலம், தோல், உடல் பாகங்களில் காணப்படும் இந்தப் புரதம் மனிதர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது" என்கிறார் ப்ரோனொய் வைத்யா.

பண்டைய எகிப்தியர்கள் கரப்பான் பூச்சிகளை விரட்டுவதற்காக செம்மறி ஆட்டின் தலையுடன் கூடிய க்னும் என்னும் கடவுளை வணங்கி வந்துள்ளனர். பண்டைய ரோம் நகரைச் சேர்ந்த எழுத்தாளர் லினி தி எல்டர், கரப்பான் பூச்சியின் அருவருக்கும் தன்மை குறித்து எழுதியுள்ளார்.

கரப்பான் பூச்சி மீது பயம் அல்லது அருவருப்புக் கொள்வதை கட்சரிடாபோபியா (katsaridaphobia) என்று அழைக்கின்றனர்.



**கரப்பான் பூச்சியில் 1300 வகைகள் உள்ளன**

பெரிப்ளானெடா அமெரிக்கானா (Periplaneta americana) என்ற வகை கரப்பான் பூச்சிகளைத்தான் நாம் வீடுகளில் அதிகளவு பார்க்கிறோம் என்று கூறுகிறார் ப்ரோனோய் வைத்யா.

ஆனால், "கரப்பான் பூச்சியில் கிட்டத்தட்ட 1,300 வகைகள் உள்ளன. இவற்றுள் 30 வகைகள் மட்டுமே தங்களது வாழ்வாதாரத்துக்காக மனிதர்களைச் சார்ந்துள்ளன. மீதமுள்ளவகைகள் காடுகள் போன்ற மனிதரற்ற பகுதிகளில் காணப்படுகின்றன" என்கிறார் அவர்.

பூமி பல்வேறு பேரழிவுகளைச் சந்தித்தபோதும் கரப்பான் பூச்சி இனம் அதில் இருந்து தங்களைத் தற்காத்து வந்துள்ளன என்று கூறுகிறார் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை இணை பேராசிரியர் முனைவர் செல்வமுத்துக்குமரன் திருநாவுக்கரசு.

"பூமியில் 350 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாகவே பூச்சிகள் வந்துவிட்டன. அதன்படி, கரப்பான் பூச்சிகள் 300-350 மில்லியன் ஆண்டுகளாக பூமியில் உள்ளன.

மனிதர்களை பொறுத்தவரை 10 இலட்சம் ஆண்டுகளாகத்தான் பூமியில் உள்ளோம். பூமி நான்கு பெரும் பேரழிவுகளைச் சந்தித்துள்ளது. இதில் மமோத் என்ற பேரானை இனம், டைனோசர்கள்



போன்ற பேருயிர்கள் அழிந்துவிட்டாலும் கரப்பான் பூச்சிகள் தப்பியுள்ளன" என்று அவர் தெரிவித்தார்.

**சுற்றுச்சூழலில் கரப்பான் பூச்சியின் பங்கு என்ன?**

கரையான் எந்தளவு சுற்றுச்சூழலுக்கு முக்கியமானவையோ அதேபோல் காட்டுக் கரப்பான் பூச்சிகளும் முக்கியமானவை.

"இறந்துபோன, அழுகிப்போகும் நிலையிலுள்ள சடலங்களை அவை உண்ணுகின்றன. சுற்றுச்சூழலின் ஊட்டச்சத்து சுழற்சியில் அவை முக்கியபங்கு வகிக்கின்றன.

ஓர் உயிரினம் இறந்துவிட்டால் அதன் உடல் அழுகிப் போகவேண்டும். இதற்கு நிறைய செயல்முறைகள் உள்ளன. இதில், காட்டுக் கரப்பான் பூச்சிகளின் பங்கும் கணிசமாக உள்ளது" என்று ப்ரோனோய் வைத்யா கூறுகிறார்.

வீணாகும் பொருட்களை மக்கக்கூடியவையாக மாற்றும் செயல்முறையில் பூச்சிகளுக்குப் பிரதான பங்குள்ளது.

அதில், "தாவரம் மாமிசம் என அனைத்தையும் உண்ணும் அனைத்துண்ணி வகையைச் சேர்ந்த கரப்பான்களுக்கும் முக்கியபங்கு உண்டு" என்கிறார் செல்வமுத்துக்குமரன்.

"உணவுச் சங்கிலியின் முக்கிய கூறுகளாக இத்தகைய பூச்சிகள் உள்ளன. இந்த உணவுச் சங்கிலியில் எங்காவது தடை ஏற்பட்டுவிட்டால் உணவு மூலக்கூறுக்கான சுழற்சி பூமியில் நடக்காமல் போய்விடும்.

அதனால், பரிணாம வளர்ச்சியடைந்த தாவரங்களுக்கோ விலங்குகளுக்கோ உணவு கிடைக்காமல் போகும் அபாயமேகூட ஏற்படலாம்" என்கிறார் செல்வமுத்துக்குமரன்.

**மனிதர்களுக்கு கரப்பான் பூச்சிகள் நோயை ஏற்படுத்துகின்றனவா?**




மலேரியா போன்று நேரடியாக எந்த நோயையும் கரப்பான்கள் மனிதர்களுக்கு ஏற்படுத்துவதில்லை.

கரப்பான் பூச்சிகளால் ஒரு சிலருக்கு ஒவ்வாமை ஏற்படுவதுண்டு.

இருப்பினும் மலேரியா போன்று நேரடியாக எந்த நோயையும் அவை மனிதர்களுக்கு ஏற்படுத்துவதில்லை என்று செல்வமுத்துக்குமரன் கூறுகிறார்.

"கொசுவால் மலேரியா, டெங்கு போன்றவை பரவுகின்றன. ஈக்கள் மூலம் கொலரா பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால், கரப்பான் பூச்சிகள் மூலம் எந்தக் குறிப்பிட்ட நோயும் மனிதர்களுக்கு ஏற்படுவதில்லை.

அதே நேரம், அவை உண்ணும் அழுகக்கூடிய பொருட்களில் நுண்கிருமிகள் அதிகளவில் இருக்கும். இவற்றை உண்டுவிட்டு நாம் உண்ணும் உணவுகள் மீது அவை நடக்கும்போது, இந்த நுண்கிருமிகள் நமது உணவில் கலந்து நமக்கு நோய் பாதிப்பை ஏற்படுத்துகின்றன" எனவும் அவர் தெரிவித்தார்.



**கரப்பான் பூச்சிகளை வீட்டுக்குள் வராமல் எப்படி கட்டுப்படுத்துவது?**

அவற்றுக்கான உணவும் ஈரப்பதமான சூழலும் இருக்கும் இடங்களில் கரப்பான் பூச்சிகள் செழித்துப் பெருகுகின்றன.

ஆகவே, அவற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத்தைப் பேணுவது அவசியம் என்று செல்வமுத்துக்குமரன் வலியுறுத்துகிறார்.



- ★ சாப்பிட்ட பாத்திரங்களை உடனடியாகக் கழுவி வைத்துவிட வேண்டும். மீதமாகும் உணவுகளை உடனடியாக அப்புறப்படுத்திவிட வேண்டும். வீட்டில் குப்பை அதிகமாகச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ★ நீங்கள் பயன்படுத்தும் குப்பைத்தொட்டிகள் மூடக்கூடிய வசதி கொண்டதாக இருக்க வேண்டும். இரவு நேரத்தில் அவற்றை வீட்டுக்குள் வைப்பதற்குப் பதிலாக, வீட்டுக்கு வெளியே வைக்க வேண்டும்.
- ★ ஜன்னல்கள், கதவு இடுக்கு, துவாரங்கள் வழியாகவும் கரப்பான் பூச்சிகள் வர வாய்ப்பு இருப்பதால் தேவையில்லாத நேரங்களில் இவற்றை அடைத்து வைக்க வேண்டும்.
- ★ பாத்திரங்களைக் கழுவும் இடங்களில் உள்ள கழிவுநீர் செல்வதற்கான துவாரம் வழியாகவும் கரப்பான் பூச்சிகள் வீட்டுக்குள் வரலாம்.
- ★ அட்டைப்பெட்டிகள் மீது கவனம் செலுத்த வேண்டும். அட்டைப் பெட்டிகள் மரத்தூளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. இவை கரப்பான் பூச்சிகளுக்குச் சிறந்த உணவாக இருக்கின்றன.
- ★ பாத்திரங்களைக் கழுவும் இடங்களில் உள்ள கழிவுநீர் செல்வதற்கான துவாரம் வழியாகவும் கரப்பான் பூச்சிகள் வீட்டுக்குள் வரலாம். எனவே, அவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இரவு நேரங்களில் மூடி வைக்க வேண்டும்.
- ★ கொஞ்சம் தண்ணீர் இருந்தாலும் கரப்பான் பூச்சியால் உயிர் வாழ முடியும் என்பதால் பாத்திரம் கழுவும் சிங்க் இரவு நேரங்களில் ஈரமாக இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ★ வீட்டுக்குள் இருக்கும் கரப்பான் பூச்சிகளை விரட்ட ஸ்ப்ரே, ஜெல் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. ஏரோசால் போன்றவற்றை பயன்படுத்துவதால் மனிதர்களுக்கும் தீங்குதான் ஏற்படும்.

கரப்பான் பூச்சிகள் வீட்டுக்குள் வந்த பிறகு, நமக்கும் கேடாகக்கூடிய வேதிம பொருட்களைப் பயன்படுத்துவதற்கு மாறாக, வரும் முன்பே அவற்றைத் தவிர்க்கலாம்.

அதற்கு கரப்பான் பூச்சிகளை வீட்டுக்குள் வராமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது என்கிறார் செல்வமுத்துக்குமரன்.

- முருகேஷ் மாடக்கண்ணு -
நன்றி - பிபிசி

## இன்றைய நாளில்...

- ✱ 1498 – கிறிஸ்தோபர் கொலம்பஸ் வெனிசுவேலாவில் தரையிறங்கினார். இங்கு வந்த முதலாவது ஐரோப்பர் இவராவார்.
- ✱ 1867 – பிரித்தானிய இலங்கையில் கண்டிக்கும் கொழும்புக்கும் இடையே தொடருந்துப் போக்குவரத்து பொதுமக்களுக்கு ஆரம்பிக்கப்பட்டது.
- ✱ 1914 – மன்னாருக்கும் மதவாச்சிக்கும் இடையில் பகல் நேர தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- ✱ 1960 – பாகிஸ்தான் நடுவண் அரசின் தலைநகராக இஸ்லாமாபாத் அறிவிக்கப்பட்டது.
- ✱ 2006 – இலங்கை, திருகோணமலையில் கடற்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 14 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்

எலெக்ட்ரிக் பஸ்கள் கொண்டுவந்து ஓடவிடப்போறாங்களாம்... அத சார்ஜ் பண்ண வரும் கரண்ட் பில்லை நாங்களும் சேர்ந்துதான் கட்டோணும் போல..



# இராதாகிருஷ்ணனுக்கு இன்று அகவை 71



நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதா கிருஷ்ணன் இன்று (01.08.2023) தனது 71 ஆவது அகவையில் கால்பதிக்கின்றார்.

1952 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி வேலுசாமி - பாக்கியம் தம்பதியின் இரண்டாவது புதல்வராக பொகவந்தலாவை, இராணிக்காடு எனும் இடத்தில் பிறந்தார் இராதாகிருஷ்ணன்.

இராதாகிருஷ்ணன் தனது ஆரம்பக் கல்வியை நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து 7ஆம் வகுப்புக்கு பின்பு கொழும்பு சென். பீட்டர்ஸ் கல்லூரியிலும் கல்வியை உயர்தரம் வரை கற்றுள்ளார்.

தனது முதலாவது அரசியல் பயணத்தை 1988 ஆம் ஆண்டு அன்றைய மலையகத்தின் தலைவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஊடாக ஆரம்பித்த இவர் அன்றைய காலகட்டத்தில் இலங்கையில் நிலவிய அரசியல் சூழ்நிலை காரணமாக தேர்தலில் யாரும் போட்டியிடாத காரணத்தால் நுவரெலியா பிரதேச சபையின் நியமன உறுப்பினராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக நியமிக்கப்பட்டார்.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நுவரெலியா பிரதேச சபையின் தலைவராக அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானால் நியமிக்கப்பட்டார். பலரும் இவருடைய நியமனம் தொடர்பில் பிரஸ்தாபித்தாலும் இவருடைய திறமைகளை நன்கு அறிந்தவர் என்ற வகையில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இவரை நியமித்தார்.

இந்த நியமனத்துக்கு சான்றுபகரும் முகமாக 1992 ஆம் ஆண்டு இலங்கையிலேயே சிறந்த பிரதேச சபையாக நுவரெலியா பிரதேச சபை தெரிவுசெய்யப்பட்டது. அன்றைய இலங்கையின் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவால் அதற்கான விருது வழங்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பின் மூலமாக போட்டியிட்டதுடன் அந்தக் குழுவுக்கு தலைமைதாங்கினார்.அந்தத் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று (33775 விருப்பு வாக்குகள்)வெற்றிபெற்றார்.இந்த வெற்றியைத் தொடர்ந்து இவர் மத்திய மாகாண கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, சமூக சேவைகள், விளையாட்டு, தோட்ட உட்கட்டமைப்பு , இந்து கலாசாரம் மற்றும் தமிழ் கல்வி அமைச்சராக அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானால் நியமிக்கப்பட்டார்.தொடர்ந்து அதே காலகட்டத்தில் அனைத்து கல்விக்கும் அதாவது, தமிழ் - சிங்கள இரண்டு மொழிகளுக்குமான அமைச்சராக நியமிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டுவரை அதனை சிறப்பாக முன்னெடுத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு அன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் தாவரவியல் பூங்காக்கள் பொது பொழுதுபோக்கு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.குறுகிய காலம் பிரதி அமைச்சராக இருந்து பின்பு அமைச்சுப் பதவியைத் துறந்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பொது வேட்பாளருக்கு தனது ஆதரவை வழங்கியதுடன் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அயராது உழைத்தார்.

அதன்படி பொது வேட்பாளர் அதிகப்படியான வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றுக் கொண்டார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிட்டு மாவட்டத்தின் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.(87375 விருப்பு வாக்குகள்)புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலையக கல்வியையும் முழு நாட்டுக்கான தமிழ் கல்வியையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும் கல்வி அமைச்சராக மாகாண சபையில் இவர் மேற்கொண்ட செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு மீண்டும் இவர் கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

குறிப்பாக, மலையகத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த 3,192 ஆசிரியர் நியமனங்களை கையில் எடுத்து அதனை வழங்கினார்.மலையக பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களை அபிவிருத்தி செய்வதற்காக 25 பாடசாலைகள் இனங்காணப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முழுமையாகப் பாடுபட்டார்.

வடகிழக்கு உட்பட முஸ்லிம் பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள பாடசாலைகளின் குறைபாடுகளையும் கேட்டறிந்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தினார்.இந்தக் காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 16 வல்லுவர் சிலைகளை நாடுமுழுவதிலும் உள்ள பாடசாலைகள் பொது அமைப்புகளிடம் இலவசமாக வழங்கி வைத்ததுடன் அதனை நேரடியாகச் சென்று திறந்து வைத்தார்.இதற்காக முழுமையான ஒத்துழைப்பை இந்தியாவின் வி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் சந்தோசம் அண்ணாச்சி வழங்கியதுடன் அவரும் தனது குழுவுடன் வருகை தந்து நிகழ்வுகளில் பங்குபற்றினார்.

மேலும் இந்தியாவின் தமிழ் நாட்டில் அன்றைய கல்வி அமைச்சராக செயற்பட்ட செங்கோட்டையனின் அனுசரணையில் ஒரு இலட்சம் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டு அவற்றை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இந்தப் பெறுமதிமிக்க புத்தகங்களைப் பெற்றுக் கொடுத்தார்.அமைச்சர் செங்கோட்டையனை வரவழைத்து அந்தப் புத்தகங்களை கையளித்ததுடன் அவருடைய பங்குபற்றுதலுடன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவையும் கண்டியில் மிகவும் சிறப்பாக முன்னெடுத்தார்.

அதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற ஆட்சிமாற்றம் காரணமாக மீண்டும் ஒரு புதிய அமைச்சரவை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உருவாக்கப்பட்டது.இந்த அமைச்சரவையில் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சராக வேலுசாமி இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டுவந்தார்.

பின்பு 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நுவரெலியா மாவட்டத்தின் இரண்டாவது அதிகப்படியான வாக்குகளைப் பெற்று இன்றும் எதிர்க்கட்சி உறுப்பினராக பாராளுமன்றத்தில் தனது குரலை ஒலித்துக் கொண்டிருக்கின்றார்.

இது தவிர, ஆன்மீகத்திலும் அதிக நாட்டம் கொண்டவர்.சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தினதும் நுவரெலியா ஆவெலியா ஸ்ரீமுத்துமாரியம்மன் அலயத்தினதும் அறங்காவலர் சபைத் தலைவராகத் தொடர்ந்து 30 வருடங்களுக்கும் மேலாக செயற்பட்டு வருகின்றார்.இவருடைய தலைமையில் சர்வதேச இந்து மாநாடு நுவரெலியாவில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

இவருடைய கல்விக்கான சேவையைப் பாராட்டி இங்கிலாந்து பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்துள்ளது.

இவர் அடிமட்டத்தில் இருந்து உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் என்றுமே எளிமையாக இருக்கின்ற ஒருவர்.இவரை அநேகமானவர்கள் ராதா அண்ணன் என்றே அன்பாக அழைப்பார்கள். அவரும் அதனையே விரும்புகின்றார்.இவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இந்த நாட்டுக்கும் மலையக மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என இந்நாளில் வாழத்துகின்றோம்.



# போலி மதுபானப் போத்தல்களை அடையாளம் காண புதிய செயலி

## உடன் தயாரிக்குமாறு வழிவகைகள் பற்றிய குழு மதுவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல்



போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்களுடன் கூடிய மதுபானப் போத்தல்களை அடையாளம் காண்பதற்குப் புதிய செயலியொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறு வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இலங்கை மதுவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

2023.07.24 ஆம் திகதி மதுவரித் திணைக்களத்துக்குக் களப்பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ த சில்வா மற்றும் காமினி வலேபொட ஆகியோர் இணைந்துகொண்டனர்.

போலியான தயாரிப்புகளைத் தடுப்பதற்காக மதுபானப் போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபோதும் சந்தையில் போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் பயன்பாட்டில் இருப்பதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். போலியான ஸ்டிக்கர்களை அடையாளம் காண்பதற்கான முறைமையொன்று திணைக்களத்திடம் இல்லையென்றும் இதன்போது இனங்காணப்பட்டது.

அத்துடன், கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் வரி அதிகரிப்பு உள்ளிட்ட காரணிகளால் மதுபானம் ஊடாகக் கிடைக்கப்பெற்ற வருமானம் வீழ்ச்சி கண்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியதுடன் மதுபானங்களுக்கான விலையை அதிகரிக்கும் முன்னர் கேள்விக்கான நெகிழ்ச்சி கணிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதுமாத்திரமன்றி, மதுபானம் மீதான வரி அதிகரிப்புகளை மேற்கொள்ளும்போது உரிய கணக்கெடுப்புகளை ஆதாரமாகக் கொண்டு நிதியமைச்சுக்கு உரிய ஆலோசனைகளை திணைக்களத்தினால் வழங்க வேண்டும் எனக் குழு வலியுறுத்தியது. அத்துடன், மதுபான உற்பத்திக்காகப் பயன்படுத்தும் அரிசி உள்ளிட்ட மூலப்பொருட்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் குழு, மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியது.

அத்துடன், நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் அளவு, சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ள மதுபானத்தின் அளவு உள்ளிட்ட தகவல்களை நேரடியாகப் பார்வையிடக்கூடிய கட்டமைப்பொன்று மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டுமென்றும் குழு சுட்டிக்காட்டியது.

மதுபான உற்பத்திக்குத் தேவையான கள் மற்றும் செயற்கைக் கள் உற்பத்தியினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் கள் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான புதிய தென்னை மரங்களின் பயிர்ச்செய்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மதுபான உற்பத்தி நிறுவனங்கள் பல உரிய வரிகளைச் செலுத்தாமல் நிலுவையைக் கொண்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அவ்வாறான நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்துமாறு குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.



வெள்ளவத்தை GIT பாலர் பாடசாலை மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு அதிபர் ரூபி விநாயகமூர்த்தி தலைமையில்(29,30) ஆகிய இருதினங்கள் இடம்பெற்றது. இக்கண்காட்சியில் பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஜனகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தொலைபேசிகள் உட்பட பொருட்களை திருடும் கும்பல் பஸ்களில் பயணிப்பவர்களுக்கு விசேட எச்சரிக்கை

கொழும்பின் பல பகுதிகளில் பஸ்களில் பயணிப்பவர்களை குறிவைத்து கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பெறுமதியான பொருட்கள் திருடப்படுவதனால் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பல பகுதிகளில் திருடப்பட்ட 43 கையடக்கத் தொலைபேசிகளுடன் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ள நிலையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சந்தேக நபர்களும் படோவிட்ட மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் டி மெல்வத்த பிரதேசத்தில் இரவு நேரங்களில் வீடுகளை உடைத்தும் பகலில் பஸ்களில் பயணிப்பவர்களிடம் கைத்தொலைபேசிகளைத் திருடியும் வந்த ஒருவர் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன் தினம் பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவிசாவளை, ஹங்வெல்ல, கிரிபத்கொட, மிரிஹான, நீர்கொழும்பு, பியகம, புஸ்ஸல்லாவ மற்றும் கிருலப்பனை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 11 திருட்டுச் சம்பவங்களுடன் தேடப்பட்டு வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த நபரால் திருடப்பட்ட பொருட்களில் 04 மடிகணினிகள், 29 கையடக்கத் தொலை பேசிகள் மற்றும் 03 டேப் கணினிகள் என்பனவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை படோவிட்ட பகுதியில் கைதானவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது பஸ்களில் பயணம் செய்பவர்களின் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்கள் என்பன திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.திருடப்பட்ட பொருட்களில் இருந்து 14 கையடக்கத் தொலைபேசிகள், தங்க மோதிரம் மற்றும் நெக்லஸ் போன்றன மீட்கப்பட்டுள்ளன. 37 வயதான சந்தேக நபர் பொல்கஸ்ஓவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (31.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 213.7650 | 225.6458 |
| கனேடியன் டொலர் | 242.1985 | 254.5921 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.3718 | 47.5088 |
| யூரோ | 354.1359 | 370.9848 |
| ஜப்பான் யென் | 2.2707 | 2.3786 |
| சிங்கப்பூர் டொலர் | 241.0963 | 253.2017 |
| ஸ்ரேலிங் பவுன் | 413.7911 | 432.2632 |
| சுவிஸ் பிராங் | 367.6018 | 387.9203 |
| ஐ.அ. டொலர் | 322.9613 | 335.4036 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 873.6481 |
| குவைட் | குவைட் தினார் | 1,072.9976 |
| ஓமான் | ஓமான் றியால் | 855.4606 |
| கட்டார் | கட்டார் றியால் | 90.3684 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 87.8144 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 89.6672 |

# சிறுவர் வைத்தியசாலையில் குழந்தை உயிரிழப்புச் சம்பவம்!

## பாரபட்சமற்ற விசாரணைக்கு மருத்துவ அதிகாரிகள் சங்கம் அழைப்பு

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிறுநீரக சத்திரசிகிச்சைக்குப் பின்னர் உயிரிழந்த மூன்று வயது சிறுவனின் மரணம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

"பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரும் விரிவான பகுப்பாய்வு இல்லாமல் சம்பவம் குறித்து முன்கூட்டியே முடிவுகளை எடுப்பது நியாயமற்றது" என மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சாமில் விஜேசிங்க தெரிவித்தார்.

"எனவே, மரணத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிவதற்காக, சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துவது அவசியம்" என்றும் வைத்தியர் வலியுறுத்தியுள்ளார்.

குழந்தை தீவிர சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்து, இடதுபுற சிறுநீரகத்தை அகற்ற அறிவுறுத்திய மருத்துவர்களின் அலட்சியம் காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளதாக குறித்த குழந்தையின் பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இருந்தபோதிலும், அறுவைச் சிகிச்சையின்போது ஆரோக்கியமான வலது சிறுநீரகமும் அகற்றப்பட்டதாக மருத்துவர்கள் பின்னர் தெரிவித்ததாக குழந்தையின் பெற்றோர் கூறுகின்றனர்.

மேலும், எந்த சிறுநீரகமும் செயற்படாத குழந்தைக்கு, தகுந்த சிறுநீரகம் மாற்றப்படும் வரை, ஹீமோடையாலிசிஸ் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, தீங்கு விளைவிக்கும் கிருமியால் குழந்தை இறந்துள்ளது.

கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த உயிரிழந்த குழந்தை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (28) உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.07.30
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5191 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,816,040.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 4 2 7 8 4 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3433 — சீட்டிழுப்பு திகதி 2023.07.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 70,850,302.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 11 57 59 62 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31235

Lucky 7 லக்கி — திகதி 30.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0017
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 7 7 7 7 0 0 — L7 இலக்கம் 1 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,288,742.16

தன நிதானய — திகதி 2023/07/30 — சீட்டிழுப்பு இலக்கம் 1221 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,544,901.60
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 09 12 13 42 — விசேட எழுத்து L
Double Chance இலக்கம் 14726

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 500 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,067,935.40
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 16 37 47 50 — விசேட இலக்கினம் மகரம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1539 — 30/07/2023 — Double Chance 77658 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,713,272.00
ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 05 55 57 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# அரசியல் தீர்வை வலியுறுத்தி யாழில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு






சாவகச்சேரி நிருபர்

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில், தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு கோரிய 100நாள் செயல் முனைவுச் செயற்பாட்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று (31) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை உறுதிசெய்யக்கோரி முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டமானது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்துக்கு வலுச்சேர்க்கும் என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு தெரிவித்துள்ளது.

# இனப்பிரச்சினையைத் தீர்க்க நாம் புது வியூகத்தை வகுக்க வேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

சாவகச்சேரி நிருபர்

இனியும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிராமல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாம் புது வியூகம் வகுக்கவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (30) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையக் கட்டடத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வல்லரசுகளையும் எங்களை நோக்கி வரச் செய்வதற்குரிய திட்டங்களைத் தீட்டவேண்டும். நாம் அவர்களுக்குத் தேவை என்பதை உணரச் செய்யும்போதுதான் எங்களின் கோரிக்கைகளை அவர்கள் காதுகொடுத்துக் கேட்பார்கள். அதற்குரிய வகையில் புதியதொரு பாதையை உருவாக்கவேண்டும்.

அம்பாந்தோட்டையில் சீனாவின் கடற்படைத்தளத்துக்கு காணியைக் கொடுத்துவிட்டு, தலைநகர் கொழும்பில் சீனாவுக்கு செயற்கைத் துறைமுக நகர உருவாக்கத்துக்கும் இடமளித்துவிட்டு, சீனாவின் பரம எதிரியான பாரத தேசத்துக்குச் சென்று அந்த நாட்டின் பிரதமரைச் சந்திக்கிறார் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.



இந்தியாவின் தேவையை நிறைவேற்றும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைவழி தொடர்பிலும் பேசி விட்டு வந்திருக்கின்றார் ரணில். இங்கேதான் சிங்களவர்களின் கெட்டித்தனத்தைப் பார்க்க வேண்டும்.

அவர்களால் சீனாவையும் சமாளித்து இந்தியாவையும் சமாளிக்க முடிகின்றது. ஆனால், நாங்கள் இந்தியா, இந்தியா என்று ஒற்றைப்புள்ளியில்தான் இருக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எப்போதும் இந்தியாவையே நம்பியிருந்திருக்கின்றார்கள். அதற்குப் பழக்கப்படுத்தியும் விட்டார்கள். இதனால்தானோ என்னவோ நாங்கள் வேறு எதையும் சிந்திக்கத் தலைப்படாதவர்களாகிவிட்டோம். அல்லது அவ்வாறு சிந்திக்கவிடாமல் எங்களை வைத்திருக்கின்றார்கள்.

சீனாவுக்கு இடமளித்த பின்னரும் இந்தியாவுக்கு இலங்கை ஜனாதிபதியை அழைக்கும் நிலைமை இருக்கின்றது. ஆனால், இந்தியாவையே இன்றுவரை நம்பியிருக்கும் தமிழர்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கின்றது.

இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் இன்று 13 மைனஸில் வந்து நிற்கின்றது. 36 ஆண்டுகளாக 13ஐ சுற்றிச் சுற்றியே வந்துகொண்டிருக்கின்றோம். அதில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக தேய்ந்து செல்கின்றது.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு அதிகாரப் பரவலாக்கமும் இப்படித்தான் இருக்கும். பகிரப்பட்ட எந்தவொரு அதிகாரமும் பறிக்கப்படமாட்டாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் கிடையாது. இவ்வாறானதொரு நிலையில் நாம் 13ஐ பற்றிப் பேசி இன்னமும் எவ்வளவு காலத்தை வீணடிக்கப்போகின்றோம். ஒன்றுமில்லாத 13 தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதால் அதற்கப்பால் நாம் யோசிக்கவில்லை. எமது சிந்தனைத் தளத்தை விரிவாக்கவேண்டும்.

இனியும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்காமல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாம் புது வியூகத்தை வகுக்கவேண்டும் என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழில் ஹெரோயினுடன் கைதான 2 பெண்கள் உள்ளிட்ட நால்வர் விளக்கமறியலில்

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் கடந்த சனிக்கிழமை (29)கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நால்வரையும் நேற்று முன்தினம் (30) ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

அதனையடுத்து நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# யாழில் ஆலய உண்டியல்களை உடைத்த குற்றத்தில் ஒருவர் கைது

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலை அம்மன் கோவில், பிள்ளையார் கோவில், வைரவர் கோவில் உள்ளிட்ட நான்கு கோவில்களில் உண்டியல் உடைத்து பணம் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உண்டியல் உடைத்து திருடப்பட்ட ஆலயங்களில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கெமராக்களில் பதிவான காட்சிகளின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், சந்தேக நபரை அடையாளம் கண்ட நிலையில் நேற்று முன்தினம் (30) ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகர் பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர். கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் .கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து ஒருதொகை உண்டியல் பணத்தை மீட்டுள்ளதாகவும் குறித்த நபர் யாழ். நகர் பகுதியில் உள்ள ஆலய உண்டியல்களை உடைத்து திருடிய குற்றத்தில் நீதிமன்றினால் 03 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அண்மையில் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பட்டா ரக வாகனத்தில் கடலாமைகளை கொண்டுசென்ற இருவர் மானிப்பாயில் கைது

வட்டுக்கோட்டை நிருபர்

சட்டவிரோதமான முறையில் நான்கு கடலாமைகளை பட்டா ரக வாகனத்தில் கொண்டுசென்ற இருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்று (31) காலை கைதுசெய்துள்ளனர் .

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலினடிப்படையில், மானிப்பாய் பகுதியில் வீதிப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பட்டா ரக வாகனமொன்றை வழிமறித்து சோதனையிட்டனர்.



இந்நிலையில் வாகனத்திலிருந்த சாக்கொன்றுக்குள் 4 கடலாமைகள் உயிருடன் இருந்துள்ளன. அவர்கள் கடலாமைகளை விற்பனைக்கு கொண்டுசென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஆமைகளை மீட்டெடுத்த பொலிஸார், 47 மற்றும் 32 வயதுகளையுடைய கொழும்புத்துறை மற்றும் இளவாலை பகுதிகளைச் சேர்ந்த இருவரை கைதுசெய்தனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சமனலவெவவின் எஞ்சியுள்ள நீரையும் உடவளவவுக்கு வழங்கினால் மீண்டும் மின்வெட்டுப் பிரச்சினைதான் தலைதூக்கும்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கு வழங்கப்படும் நீரைப்பயன்படுத்தியே மகாவலி வலயத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருந்தும் சமனலவெவ மற்றும் உடவளவ நீர்த்தேக்கங்களில் நிலவும் நீர்த் தட்டுப்பாடு காரணமாக எஞ்சியுள்ள நீரையும் உடவளவுக்கு வழங்கினால் மின்வெட்டை அமுல்படுத்தவேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்படலாமென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்தின் ஊடாக மகாவலி வலயத்துக்கு நீர் விநியோகிக்கப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

எனினும், சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கு கடந்த 10 நாட்களாக நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நீர் விநியோகம் கோரி மகாவலி வலய விவசாயிகள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று (31) 8 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. இந்நிலையில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு நீர்ப்பாசனத் திணைக்களம், மின்சார சபை ஆகிய இரு நிறுவனங்களினதும் உயரதிகாரிகளும் (31) நேற்று முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.



எனினும், சமனலவெவ நீர்த்தேக்கத்தில் உள்ள எஞ்சியுள்ள நீரையும் விநியோகித்தால் நாட்டின் மின்சார விநியோகக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டு நாட்டில் மீண்டும் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டி வரும் என மின்சார சபையின் அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பசறை ,அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஆடிப்பூர தேர் பவனி நேற்று(31)இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் மற்றும் பக்த அடியார்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.




வட்டவளை மீனாட்சி தோட்ட ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்துக்குச் சென்ற அகில இலங்கை சிவதொண்டுப் பேரவையின் தலைவர்,ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.
(படம்: கினிகத்தேனை நிருபர்)

# கஷ்டப் பிரதேச பாடசாலைக்கு உதவும் கரங்கள் உதவி

தலவாக்கலை நிருபர்



இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கஷ்டப் பிரதேச பாடசாலையான கிறேட் வெஸ்டன் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அப்பாடசாலையின் ஆசிரியர் பி.கேதீஸின் முயற்சியால் இந்த விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் பொருளாளர் அஜித்குமார், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் ஏகாம்பரம், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஹட்டன் பிரதேச அமைப்பாளர் ரஜினிகாந்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நுவரெலியாவில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு




செ.திவாகரன்

பெரெண்டினா நிறுவனத்தின் அறிவுச்சுடர் கல்வி மேம்பாட்டு செயற்றிட்டத்தின் கீழ் நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பின்தங்கிய இருபது பாடசாலைகளில் கல்வி கற்கும் 7,500 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு பெரெண்டினா நிறுவனத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட , நுவரெலியா வலயக்கல்விப் பணிப்பாளர்,பெரெண்டினா நிறுவனத்தின் முகாமையாளர், சக உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது பெரெண்டினா நிறுவனத்தின் உறுப்பினர்கள், கற்றலின் அவசியம்,கல்வி மேம்பாடு, கற்றலுக்கு உதவி செய்வோருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்கள் வழங்கவேண்டிய மரியாதை ,ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை என்பன தொடர்பாக உரை நிகழ்த்தினர்.

# பயணிகள் பஸ் விபத்து

பதுளை நிருபர்

கொழும்பிலிருந்து மொனராகலை நோக்கிப் பயணித்த பயணிகள் பஸ் ஒன்று நேற்று (31) விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ் வேகமாகப் பயணித்ததால் கொடக்கவலை பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாக மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் 14பேர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் மொனராகலை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மொனராகலைப் பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மணிப்பூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இரு பெண்கள் மத்திய - மாநில அரசுக்கு எதிராக மனுத்தாக்கல்



மணிப்பூர் கலவரத்தில் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக இழுத்துச் சென்று பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் இருவர், மத்திய, மாநில அரசுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளதுடன் பாரபட்சமற்ற, நேர்மையான விசாரணை நடத்த உத்தரவிட கோரியுள்ளதுடன் தங்களை பற்றிய விவரங்கள் வெளியே தெரியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இவ்வழக்கு தலைமை நீதிபதி டி.வை. சந்திரசூட் தலைமையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மணிப்பூரில் இரண்டு பழங்குடியினப் பெண்கள் மைத்தேயி சமூக ஆண்கள் கும்பலொன்றால் நிர்வாணப்படுத்தப்பட்டு ஊர்வலமாக இழுத்துச் செல்லப்படும் வீடியோ கடந்த புதன்கிழமை (19) வெளியாகி உலகம் முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதில் ஒரு பெண் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருந்தார்.

இதுகுறித்து கடும் கண்டனம் தெரிவித்திருந்த உச்ச நீதிமன்றம், இந்த விவகாரத்தில் தாமாக முன்வந்து வழக்கு தொடர்ந்தது. இந்த நிகழ்வால் மிகவும் தொந்தரவுக்குள்ளாகியிருப்பதாக தெரிவித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.வை.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மணிப்பூர் வீடியோ தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உச்ச நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறியிருந்தது.

இந்நிலையில், மணிப்பூர் வன்முறை குறித்த வழக்கு விசாரணையை மாநிலத்துக்கு வெளியே மாற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு கோரிக்கை விடுத்தது. மேலும், அங்கு நடந்த கூட்டுப் பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட வன்முறை தொடர்பான அனைத்து வழக்குகளையும் 06 மாத காலத்துக்குள் முடிக்க உத்தரவிடுமாறும் அரசு கோரியுள்ளது.

இது தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தில் மத்திய உள்துறை செயலாளர் அஜய் பல்லா தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், இந்த விவகாரத்தில் அரசு மிகவும் தீவிரத்துடன் செயல்படுவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் மணிப்பூர் வழக்கை சி.பி.ஐ. விசாரணை ஏற்றது. இதனையடுத்து நேற்று மணிப்பூர் வைரல் வீடியோ விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் விசாரித்தது.

**8ஆவது நாளாகவும் முடங்கிய பாராளுமன்றம்**

எதிர்க்கட்சி எம்.பிக்களின் அமளியால் பாராளுமன்றத்தில் இரு அவைகளின் அலுவல்களும் நேற்று 8ஆவது நாளாகவும் முடங்கின.

பாராளுமன்றம் நேற்று காலை தொடங்கியவுடன் மணிப்பூர் விவகாரத்தை எதிர்க்கட்சி எம்.பி.க்கள் மீண்டும் எழுப்பி அமளியில் ஈடுபட்டனர். இதனால், இரு அவைகளையும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைப்பதாக அவைத் தலைவர்கள் அறிவித்தனர்.

இதற்கிடையே மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதம் 10 நாட்களில் பட்டியலிடப்படும் என்று பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் தற்கொலை குண்டுத்தாக்குதல்: 44 பேர் உயிரிழப்பு; 200 பேர் படுகாயம்





பாகிஸ்தானின் வடபகுதியிலுள்ள பஜௌர் மாவட்டத்தில் இடம்பெற்ற அரசில் கட்சிக் கூட்டமொன்றை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 200இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணம் பஜௌர் மாவட்டத்திலுள்ள கர் என்ற இடத்தில் பழைமை வாய்ந்த ஜமியத் உலமா - இ - இஸ்லாம் (Jamiat Ulema-e-Islam (JUI-F) என்ற அரசியல் கட்சி சார்பில் நேற்றுமுன்தினம் (30) கூட்டமொன்று நடத்தப்பட்டது. ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயற்படும் இந்த அரசியல் கட்சியின் கூட்டத்தில் சிறுவர்கள் உட்பட ஏராளமானோர் குழுமியிருந்தனர். கூட்டத்துக்கு நடுவே திடீரென பயங்கர சத்தத்துடன் வெடிகுண்டு வெடித்து சிதறியுள்ளது.

கூட்டத்தில் இருந்தவர்கள் மரண ஓலமிட்டு அங்கும் இங்கும் சிதறியோடினர். குண்டு வெடித்ததில் அப்பகுதி முழுவதும் ஒரு நொடி குலுங்கியது. இதனால் அந்த இடமே போர்க்களம் போல காட்சியளித்தது. இந்த வெடிகுண்டு தாக்குதலில் 44 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் ஜமைத் உலெமா கட்சியின் முக்கிய தலைவர் ஒருவரும் பலியாகியுள்ளார். 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். கை, கால்களை இழந்த நிலையில், பலரும் இரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடியதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உடனடியாக பொலிஸாரும் மீட்புப் படையினரும் விரைந்து வந்து காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலை கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேடையில் கட்சியின் மூத்த தலைவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் தற்கொலை குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்துள்ளதாக அம்மாகாண பொலிஸார் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இத்தாக்குதலின் பின்னணியில் ஐ.எஸ் அமைப்பு இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# உக்ரைன் - ரஷ்ய போர் நிறுத்த உச்சி மாநாடு சவூதியில்

ரஷ்ய - உக்ரைனுக்கிடையிலான போர் இன்று 524ஆவது நாளாக தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் போரை நிறுத்துவது தொடர்பான உச்சி மாநாடு இம்மாதம் சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ளது.

உக்ரைன் மற்றும் ரஷ்யா இரு நாடுகளும் கோதுமை, பார்லி போன்ற உணவு தானியங்களின் ஏற்றுமதி மையமாக உள்ளதால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டு விலையும் உயர்ந்துள்ளது. இது உலக பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால் போரை நிறுத்த ரஷ்யாவும் உக்ரைனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் படி பல்வேறு நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.


போர் தொடங்கியது முதல் அரபு நாடுகள் நடுநிலை வகித்து வருவதால் இரு நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தைக்கு உதவுமாறு உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, ஐக்கிய அரசு நாடுகளை கேட்டுக் கொண்டார். தற்போது அதற்கான ஏற்பாடுகளை சவூதி அரேபிய அரசு செய்து வருகிறது.

இந்த மாநாடு செங்கடல் அருகேயுள்ள துறைமுக நகரமான ஜெட்டாவில் நடைபெறவுள்ளது. இதில் உக்ரைன், பிரேஸில், இந்தியா உட்பட சுமார் 30 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சார்பில் உயர்மட்ட அதிகாரி ஒருவரும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்கான திகதி உள்ளிட்ட மற்ற விவரங்கள் குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்த போர் நிறுத்த மாநாட்டில் ரஷ்யா பங்கேற்குமா என்பது உறுதி செய்யப்படவில்லை.

# பிரபல சாகசப்பிரியர் ரெமி லுசிடி கால் தவறி வீழ்ந்து உயிரிழப்பு



பிரான்ஸைச் சேர்ந்த பிரபல சாகசப் பிரியர் ரெமி லுசிடி ஹொங்கொங்கிலுள்ள 721அடி உயரமான கட்டடத்தின் 68ஆவது தளத்தை அடைந்தபோது தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

உலகெங்கிலுமுள்ள உயரமான கோபுரங்கள் உள்ளிட்ட பல்வேறு உயரமான கட்டடங்களில் சுவர் வழியாக ஏறி சாகசம் செய்வதில் பிரபலமானவர் பிரான்ஸை சேர்ந்த சாகசப் பிரியர், 30 வயதான ரெமி லுசிடி.

இந்நிலையில், ஹொங்கொங்கிலுள்ள 721 அடி உயரமான அடுக்குமாடி குடியிருப்பில் தனது நண்பரை காண வந்ததாகக் கூறி அவர் அந்த குடியிருப்புக்குள் நுழைந்திருக்கிறார். 68ஆவது மாடியை அடைந்தபோது, நிலை தடுமாறியுள்ளார். இந்நிலையில் குறித்த தளத்திலிருந்த கதவைத் தட்டி அங்கிருந்த பெண்ணொருவரிடம் உதவி கோரியுள்ளார்.

ஆனால், அந்த பெண்ணோ அச்சத்தில் உதவ மறுத்தநிலையில் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார். அதற்கிடையில் ரெமி லுசிடி கால் தவறி கீழே விழுந்துள்ளார்.







**உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) மகாபாரதக் கதையில் பாண்டவர்களின் வனம் புகும் காட்சி பக்தர்களினால் வேடம் அணிந்து நடித்துக் காட்டப்பட்டது.**

**படம்:** உடப்பு நிருபர்

# கொழும்பில் வீதித்தடை இரும்புகளை திருடி விற்கும் போதை ஆசாமிகள்



வீதித்தடைகளில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் குழாய்கள் மற்றும் இரும்பு கிளிப்புகள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மேல்மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர், திருட்டில் ஈடுபட்ட போதைக்கு அடிமையான இருவரை கைது செய்துள்ளனர்.

பாராளுமன்றத்தை நோக்கி வரும் போராட்டக்காரர்களை தடுப்பதற்காக சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த தடுப்புச்சுவர்களில் இருந்து திருடர்கள் இரும்புக் குழாய்களை அகற்றியுள்ளனர். திருடப்பட்ட ஜி.ஐ.குழாய்களின் மதிப்பு ரூ. 2.8 மில்லியன் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஊழல் ஆட்சியாளர்களுக்கு எதிராக வெடித்த பொதுமக்கள் போராட்டங்களையடுத்து, இராணுவம் மற்றும் பொலிஸார் இந்த தடையை ஒரு வருடமாக பயன்படுத்துகின்றனர். கடந்த மே மாதம் முதல் போதைப்பொருள் பாவனையாளர்களால் குழாய்கள் ஒவ்வொன்றாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டதாக மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த இரும்புக் குழாய்களை பகல் நேரத்திலும் இரவிலும் யாரும் கண்டுகொள்ளாத நிலையில் திருடர்கள் திருடிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. திருடர்கள் இரும்புக் குழாய்களை எடுத்துச் செல்வதை பொலிஸாரும் பார்த்ததாகச் சிலர் கூறுகின்றனர்.

இந்த இரண்டு சந்தேக நபர்களும் 44 குழாய்களை மட்டுமே திருடியதாக பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

திருடப்பட்ட 28 குழாய்கள் பல்வேறு நபர்களுக்கும் பழைய உலோகக் கடைகளுக்கும் விற்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அத்துல்கோட்டே மாளிகாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் 50 மற்றும் 35 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# முத்துராஜா யானையை தாய்லாந்துக்கு கொண்டுசென்றமை தொடர்பில் துறைசார் மேற்பார்வைக் குழுவில் கவனம்




இந்நாட்டுக்கு நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற முத்துராஜா யானையை மீண்டும் தாய்லாந்துக்கு கொண்டு சென்றமை காரணமாக இலங்கை தொடர்பில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட அதிருப்தி, சுற்றாடல் இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அண்மையில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த யானை மீண்டும் தாய்லாந்துக்கு கொண்டுசெல்லப்பட்டது நிபந்தனைகளுடனா என்பது மற்றும் அதற்கான கரணங்கள் என்ன என்பது குறித்தும் அந்தக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும அமைச்சின் செயலாளரிடம் வினவினார்.

வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை, மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் வருடாந்த அறிக்கைகளை குழுவில் கருத்திற்கொள்வதற்கு வனப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட நிறுவனங்களின் பணிப்பாளர்களின் பங்கேற்புடன் இந்தக் குழுக் கூட்டம் அண்மையில் (18) பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

2001ஆம் ஆண்டில் தாய்லாந்து அரசின் நன்கொடையாக இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற முத்துராஜா யானை அரச பட்டயம் ஒன்றின் மூலம் அளுத்கம கந்தே விகாரைக்கு தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளது என இதன்போது புலப்பட்டது. இந்த யானை தாவர, விலங்கினப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பழக்கப்பட்ட யானையொன்றாக வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் இலக்கம் 178 கோப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதனையடுத்து தனியார் சொத்தாகக் கருதப்பட்டுள்ளதால், அதன்பின்னர் இந்த விடயம் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியுள்ளது.

இந்த யானையை பராமரிப்பதில் ஏற்பட்ட குறைபாடுகளினால் யானையின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாகவும் அதனை அடிப்படையாகக் கொண்டு தாய்லாந்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக வலைத்தளங்கள் அந்த யானையை தாய்லாந்துக்கு கொண்டு வருமாறு அந்நாட்டு அரசாங்கத்திடமும் இந்நாட்டிலுள்ள தாய்லாந்து தூதுவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளன. அதற்கமைய, வெளிவிவகார அமைச்சு மற்றும் தாய்லாந்து தூதுவர் ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தலையிட்டு யானை தாய்லாந்துக்கு கொண்டுசெல்லப்பட முன்னர் ஆரம்ப சிகிச்சையாக அதன் கால்களின் பின்பகுதியில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சையளித்து 90%க்கும் அதிகமாகக் குணமடைந்துள்ளது.

ஆனால் யானையின் முன் கால்களில் உள்ள காயங்கள் குணமடைவதற்கு நீண்ட காலம் தேவைப்படுவதால், தாய்லாந்தில் யானைக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் இந்நாட்டை விட அதிகம் என்பதால், யானை குணமடைந்த பின்னர் மீண்டும் கந்தே விகாரைக்கு ஒப்படைக்கப்படும் என விகாரையின் தலைமை தேரருக்கு உறுதியளித்து, தாய்லாந்து அரசினால் சுமார் 220 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டு பிரத்தியேக விமானம் மூலம் யானை தாய்லாந்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

ஆனால், முத்துராஜா யானையை இலங்கைக்கு திருப்பி அனுப்ப மாட்டோம் என தாய்லாந்தின் சுற்றுச்சூழல் அமைச்சர் கூறியதால், இது இலங்கைக்கு சர்வதேச அளவில் அவமானத்தை ஏற்படுத்தியது. இதற்கு உண்மையிலேயே பொறுப்பான அரச நிறுவனம் எது என்பது குறித்து குழு வினவியது. யானையை தனிப்பட்ட பயன்பாட்டுக்கு விகாரைக்கு வழங்கியுள்ளதால் யானையின் பொறுப்பு மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு இல்லை என வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாளர் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சினால் கிடைக்கப்பெற்ற அறிவித்தலின் பிரகாரம், யானையை மீள அழைத்துச் செல்வதற்கு தேவையான வசதிகளை மாத்திரம் அமைச்சு வழங்கியது எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், வெளிநாடுகளில் இருந்தும் யானைகளைக் காண சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதும், யானைகளுக்குப் பெயர் போன நாட்டுக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட யானையை பராமரிக்க முடியாமல் போனமை சிக்கலானது எனக் குழுவின் தலைவர் தெரிவித்தார். கால்நடை மருத்துவர்களின் உதவியை முறையாகப் பெற்று யானைக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் தங்களுக்கு இருந்தபோதிலும், தாய்லாந்து அரசு மற்றும் மக்களின் பலத்த செல்வாக்கு காரணமாக யானையை தாய்லாந்துக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், பலாங்கொடை பிரதேசத்தில் யானை வேலிகள் அமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் அதிக விலையில் குடிநீர் போத்தல்கள் உள்ளிட்ட நுகர்வுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் ஏதேனும் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அதன் வண்ணத்துப்பூச்சிப் பூங்கா பல வருடங்களாக மூடப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான அகில எல்லாவல மற்றும் வருண லியனகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

**நூலாசிரியர் நா.நகுலேஸ்வரனின் 'முனை உடைந்த முறை' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு பழைய நகர சபை கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(29) மாலை நடைபெற்ற போது நூலின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் அருகில் விமர்சன உரையாற்றிய கவிஞர் மேமன் கவி, கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ உட்பட நூலாசிரியரும் உடன் காணப்படுகின்றனர்.**



# சாகசம் புரிவோரால் பொதுமக்கள் அசௌகரியம்

## நடவடிக்கை எடுக்குமாறு ஏறாவூர் மக்கள் கோரிக்கை

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் வரும் இனந்தெரியாத நபர்கள் பொதுப்போக்குவரத்தை சீர்குலைப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்ற அதேவேளை, இவ்வாறான செயற்பாடு பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவு, சாய்ந்தமருது பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ளடங்குகின்ற பிரதான வீதிகள் மற்றும் உள்ளக வீதிகளில் இவ்வாறு இனந்தெரியாத நபர்கள் தலைக்கவசமின்றி பொதுப் போக்குவரத்தைக் குழப்பும் வகையில் அதி சக்தி வாய்ந்த இயந்திரம் கொண்ட மோட்டார் சைக்கிளில் வருகை தந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு குறித்த மோட்டார் சைக்கிளில் இருவர் தனியாக வருவதுடன் அதிக சத்தம் கொண்ட ஒலி எழுப்பி வீதிகளின் நடுவே அதிவேகமாகப் பயணம் செய்து ஏனையோரை அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் உயரதிகாரிகளின் கவனத்துக்கு அப்பகுதி மக்கள் முறைப்பாடுகளை வழங்கியுள்ள நிலையில், இவ்வாறானவர்கள் வீதிப்போக்குவரத்துச் சட்டத்தை மதிக்காமல் தொடர்ச்சியாக பாடசாலை நாட்கள் மற்றும் அலுவலக நாட்களிலும் மிக வேகமாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி சாகசங்களை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சட்டவிரோதமாக பொதுப்போக்கு வரத்தைச் சீர்குலைத்து உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தும் செயலில் ஈடுபடும் நபர்களைக் கைதுசெய்ய பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# தாந்தாமலை புனித யாத்திரை

பாண்டிருப்பு செய்தியாளர்

கோட்டைக்கல்லாறு புனித தலயாத்திரை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தாந்தாமலை முருகன் ஆலயத்தை நோக்கிய 10ஆவது புனித யாத்திரை நிகழ்வு திங்கட்கிழமை(31) ஆரம்பமாகியது.

தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் கோட்டைக்கல்லாறு அம்பாறைவில் பிள்ளையார், முத்து மாரியம்மன் ஆலய முன்றிலில் இருந்து ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் பாதயாத்திரை மேற்கொள்வது வழக்கமாகும்.

இதற்கமைய இம்முறையும் நேற்று அதிகாலை 05 மணிக்கு பாதயாத்திரை ஆரம்பமாகியது. இவ் யாத்திரை இன்று 01ஆம் திகதி காலை தாந்தாமலை



முருகன் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. இரு தினங்களும் பாதயாத்திரையில் ஈடுபடும் அடியார்களுக்கு அன்னதானம், தாகசாந்தி போன்றவை வழங்கப்படவுள்ளன. குறித்த பாதயாத்திரைக் குழுவினர் கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், ஈஸ்டன் தோட்டம், களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு சந்தி, பெரியபோரதீவு, கோயில் போரதீவு, புன்னக்குளம், தும்பங்கேணி, நிலக்கோட்டை, 40ஆம் கட்டை, செல்வாபுரம், வாழைக்காலை ஆகிய இடங்கள் ஊடாக சென்று இன்று அதிகாலை காலை தாந்தாமலை முருகன் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. இம்முறை அதிகளவிலான பக்தர்கள் பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



றிஸ்லி முஸ்தபா சமூக சேவை அமைப்பின் நிதியுதவி மூலம் தெஹியத்தகண்டி இந்துசார பிள்ளை பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி இல்லத்துக்கு கற்றல் உபகரணங்கள், மலசலகூடங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றன. மேற்படி இல்லத்தின் நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு விஜயம் செய்த அமைப்பின் ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா மேற்படி உதவிகளை வழங்கிவைத்தார். **படங்கள்:** கோணாவத்தை செய்தியாளர்

# பிரசவத்துக்கு பின்னரான உளப் பாதிப்பு குறித்த பயிற்சிப்பட்டறை



மாளிகைக்காடு செய்தியாளர்

பிரசவத்துக்கு பின்னரான உள பாதிப்புகள் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் மேற்பார்வை தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார மாதுக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக, தாய் - சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எச்.ரிஸ்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித் கலந்துகொண்டதுடன் வளவாளராக கல்முனை பிராந்திய உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஜே.நௌபல் கலந்து கொண்டு சந்தேகங்களையும் தீர்த்து வைத்தார்.

# செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு பிரிவு பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்வு

மாளிகைக்காடு செய்தியாளர்

சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவை மக்களின் தேவை கருதியும் சிகிச்சைகளுக்கான ஆளணி மற்றும் முக்கிய வளங்களைப் பெறுவதற்காகவும் பிரதேச வைத்தியசாலையாகத் தரம் உயர்த்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையின் தேவையை உணர்ந்து தொடர்ந்தேர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருடன் வெள்ளிக்கிழமை(28) இடம்பெற்ற கலந்துரையாடலில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் மறுசீரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சார்பில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் கலந்துகொண்டு குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கான நியாயம் மற்றும் மக்களின் அபிப்பிராயம் தொடர்பில் விரிவாக விளக்கினர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சின் தரமுயர்த்தல் குழுவானது, செந்நெல் கிராமம் ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவை பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்காக பெரிதும் ஒத்துழைத்த முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் மற்றும் தற்போதைய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மெலிண்டன் கொஸ்தா ஆகியோருக்கும் மாகாணத் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட ஏனைய பிரிவுத் தலைவர்களுக்கும் விசேடமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் றிபாஸ் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



கறுப்பு ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்வு தமிழரசுக் கட்சியின் துறைநீலாவணை வட்டாரக்கிளையின் தலைவர் த.கணேசமூர்த்தி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட எம்.பி. த.கலையரசன், முன்னாள் எம்.பிகளான பா.அரியநேந்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித்தலைவர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஏறாவூரில் மாணவியர் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேக நபரான ஆசிரியருக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஏறாவூர் செய்தியாளர்

மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்திலுள்ள பெண்கள் உயர்தரப் பாடசாலையொன்றில் ஆங்கிலபாட ஆசிரியர் ஒருவர் 29 மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையில் சந்தேக நபரான ஆசிரியருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேலதிக நீதிபதியும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதியுமான எஸ். அன்வர் சாதாத் சந்தேக நபருக்கு ஓகஸ்ட் 02ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் திங்கட்கிழமை(31) இடம்பெற்ற குறித்த வழக்கு விசாரணையில், நீதிமன்றம் முன்னிலையில் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

சந்தேகநபர் தானே வழக்கைப்பேச அனுமதிக்குமாறு நீதிபதியைக் கோரியபோது சட்டத்தரணியை நியமிப்பதற்கு இரண்டு வாரகாலம் அவகாசம் வழங்கியுள்ளதனால் சந்தேகநபர் வழக்குப்பேச முடியாது என்றும் தேவையற்ற பேச்சுகளுக்கு நீதிமன்றில் இடமளிக்கமுடியாது எனவும் நீதிபதி சந்தேக நபரை எச்சரித்தார்.இதன்போது மாணவிகள் மற்றும் ஆசிரியைகள் ஐந்துபேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதையடுத்து, வழக்கு விசாரணை ஓகஸ்ட் 02ஆம் திகதி புதன்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டதுடன் சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு வாக்குமூலத்தின் பின்னரும் இதுதொடர்பில் ஏதாவது கருத்துச்சொல்ல விரும்புகிறீர்களா? என சந்தேக நபரிடம் நீதிபதி கேட்டபோது, சந்தேக நபர் அமைதியாக இருந்தார். குறித்த பாடசாலையில் 2019ஆம் ஆண்டு தரம் ஏழு வகுப்பு 'பி' பிரிவில் கல்விகற்ற மாணவிகள்மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக மட்டக்களப்பு பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி நாகமணி சுசீலா இவ்வழக்கை ஏலவே தாக்கல் செய்திருந்தார். நீதிமன்றில் கதவுகள் மூடப்பட்ட நிலையில், மாணவிகளிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. விசாரணை தினசரி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு



களுதாவளை செய்தியாளர்

இலங்கைத் தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்ட புதிய நிர்வாகத் தெரிவு மட்டக்களப்பில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி திருகோணமலை மாவட்டத் தலைவர் எஸ்.குகதாசன், மட்டக்களப்பு அ.செல்வேந்திரன், பட்டிப்பளை மா.நடராசா மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச முன்னாள் தவிசாளர் சி.புஷ்பலிங்கம் ஆகியோரின் முன்னிலையில் நிர்வாகத்துக்கான தெரிவுகள் நடைபெற்றன.

இதன்போது மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், பொருளாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், உபதலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், உப செயலாளராக மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் மேயர் தி.சரவணபவன் மற்றும் 10 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

# அல்- ஹிதாயா மகா வித்தியாலயத்தில் திறந்த ஆராதனை வெளியரங்கு திறப்பு



அம்பாறை மாவட்ட செய்தியாளர்

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள சவளக்கடை வீரத்திடல் அல்- ஹிதாயா மகா வித்தியாலயத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு வியாழக்கிழமை(24) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம்.முனாஸிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.செய்யது உமர் மௌலானா மற்றும் கௌரவ அதிதியாக நற்பிட்டிமுனை அல்- கரீம் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரின் முன்னாள் இணைப்புச் செயலாளருமான சீ.எம்.ஹலீம் (எல்.எல்.பி.)ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஆசிரியர்கள், அல்- கரீம் பவுண்டேஷன் நிறுவன உறுப்பினர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.






அட்டாளைச்சேனை யு.கே.இஸ்மாயில் பவுண்டேஷன் அமைப்பினால் நடத்தப்பட்ட குர்ஆன் மதரஸா பட்டமளிப்பு விழா அமைப்பின் தலைவர் கே.எம்.சுபைர் தலைமையில் அட்டாளைச்சேனை அல்-முனீரா பெண்கள் உயர் பாடசாலை கேட்பார் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை(30) இடம்பெற்றது. இதில் கற்கை நெறிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பிரதம அதிதியாக ஏ.சி.முஹம்மது மௌலவி, ஏனைய அதிதிகளாக யூ.எல்.எம்.நியாஸ் மௌலவி, எம்.நசீர் மௌலவி மற்றும் அமைப்பின் செயலாளர் எஸ்.சுலைமாலெப்பை ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** திராய்க்கேணி செய்தியாளர்





மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேச சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய தேசியப் போட்டிகளான சித்திரம், கிராமிய நடனங்கள், குறு நாடகம் ஆகியன ஆரையம்பதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை(29) இடம்பெற்றன. பிரதேச செயலாளர் திருமதி என். சத்தியானந்தியின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் யூ.எஸ்.எவ்.பரீட், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.யுனைதீன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** ஆரையம்பதி செய்தியாளர்

# நிரந்தர அரசியல் தீர்வைக் கோரி திருகோணமலையில் கவனயீர்ப்பு

*அப்துல்சலாம் யாசீம், மூதூர், கிண்ணியா செய்தியாளர்கள்*




தமிழ்பேசும் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வான சமஷ்டியை வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று திருகோணமலையில் திங்கட்கிழமை (31) முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது "சமஷ்டி அதிகாரப் பகிர்வை உறுதி செய், அதிகாரப் பகிர்வு எமக்கு வேண்டும்" போன்ற பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய 100 நாள் செயல்முனைவின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு குறித்த வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் இந்த ஜனநாயகப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், திருகோணமலையிலும் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்வைத்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

# இந்திய அரசின் உதவியுடன் மருந்து தட்டுப்பாடு நிவர்த்திக்கப்பட்டுள்ளது

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



*வெல்லாவெளி செய்தியாளர்*

எம்மக்களின் தேவையறிந்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு என்னாலான அபிவிருத்திகளையும் வாழ்வாதார விடயங்களையும் முன்னெடுத்து வருகின்றேன். துறைநீலாவணை தொடக்கம் வெருகல் வரையான வைத்தியசாலைகளில் பல்வேறு வகையான குறைபாடுகள் காணப்பட்டாலும் எம்மக்களின் தேவைகளை அறிந்து மக்கள் இன்னல்களைத் தீர்ப்பதுதான் எனது பணியாக இருக்கின்றது.

மேலும், அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடுகள் காணப்பட்டாலும் அரசாங்கம் இந்திய அரசின் உதவியுடன் நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து வருகின்றது என விவசாய இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் மூலம் உலக வங்கியின் ஒரு கோடியே 17 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் வைத்தியர் விடுதிக்கான மீள் புனரமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (30)மாலை இடம்பெற்றது.

துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழுத் தலைவர் பிள்ளையான்தம்பி இலட்சுமணன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் டீ.ஜீ.எம்.கொஸ்தா, மாகாண திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன், பிராந்திய சுகாதாரப் பணிமனையின் பிரதிப்பணிப்பாளர் டொக்டர் நவலோஜிதன், துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.ஜீ.ஐ.இஹ்ஸானிய்யா, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஏ.ரொஸ்மண், அமைச்சரின் துறைநீலாவணை இணைப்பாளர் க.அமிர்தலிங்கம் மற்றும் தாதி உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்ட கிராமப்புற வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் போக்குவரத்துப் பிரச்சினை, வைத்தியர் விடுதிப் பிரச்சினைகளுடன் தத்தமது சிறு குழந்தைகளுடன் பல அசௌகரியங்களை அனுபவித்து வருவதை அவதானித்துள்ளேன்.

துறைநீலாவணை வைத்தியசாலையில் வைத்தியர் விடுதிப் பிரச்சினை, சுற்றுமதில் பிரச்சினை, நோயாளர் காவுவண்டி தேவை, நோயாளர் காவுவண்டி சாரதி, சுகாதார ஊழியர்கள் தேவை, வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன.

இதனை கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் போன்றோரிடமும் அரசாங்கத்திடமும் கேட்டு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய தார்மீக கடமையை எனக்கு வாக்களித்த மக்களுக்கும் கிராமங்களுக்கும் நிறைவேற்றிக் கொடுப்பேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கஷ்டப் பிரதேசத்தில் மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்கிக்கொண்டிருக்கும் மண்டூர், பாலையடிவட்டை, பழுகாமம், வாகரை, கதிரவெளி உட்பட பல பிரதேச வைத்தியசாலைகளில் பல்வேறு தேவைகள், குறைபாடுகள் இருக்கின்றன.

பிரதேச வைத்தியசாலைகளின் குறைபாடுகள், தேவைகள் சம்பந்தமான பிரச்சினைகள் பிரதேச செயலக மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்துக்கு முறைப்பாடுகளாக வருவதில்லை. அவ்வாறு எங்களிடம் பொதுமக்கள், வைத்தியசாலை அபிவிருத்திக்குழுக்கள் பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவதில்லை.

வைத்தியர் விடுதிப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் 70வீதமான ஒட்சிசன் தேவைகளையும் தட்டுப்பாட்டையும் நிறைவேற்றிக் கொடுத்துள்ளேன். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை, கல்வி, சுகாதாரம், விவசாயம், குடிநீர், போக்குவரத்து, மக்களின் நலன்புரி வேலைத்திட்டம், வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறை, தேவைகள், பொருட்களின் தட்டுப்பாடு, பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பாரியதொரு மனிதாபிமான மக்கள் பணியை முன்னெடுத்து வருகின்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கிழக்குக்கு ஆளுநராக கிடைத்ததை வைத்துக்கொண்டு கிழக்கு மாகாணத்தை எவ்வாறு கட்டியெழுப்பலாம், எவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்ளலாம் என சிந்தித்து செயலாற்ற வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. அந்த வகையில், துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் காவுவண்டி, ஆளணிப் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தார்மீக கடமையுடன் நிறைவேற்றித்தருவார் என்ற நம்பிக்கை இருக்கின்றது - என்றார்.

# செங்கலடியில் மணலுக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி திருட்டு

## தமிழர் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கண்டனம்

*கனகராசா சரவணன்*

செங்கலடி பிரதேசத்தில் மணலுக்கான செயற்கை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளனர். சாதாரணமாக, 03 கீப் ஒரு ரிப்பர் மண் 32 ஆயிரம் ரூபா. திட்டமிட்டவகையில் செயற்கை நெருக்கடியை ஏற்படுத்தி குறித்த நபர்கள் ஆதாயம் பெற்றுக்கொள்கின்றனர். எனவே, மாவட்டத்தில் வகைதொகையின்றி ஆற்று மணலில் ஏராளமான திருட்டுகள் நடந்துள்ளன. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழர் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணவதிபிள்ளை மோகன் தெரிவித்தார்.

செங்கலடியிலுள்ள தமிழர் உணர்வாளர் அமைப்பின் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் கடந்த இரு வருடங்களுக்கு முன்பு இலங்கை புவிச்சரிதவியல் அளவைகள் சுரங்கங்கள் திணைக்களத்துக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 50 தொடக்கம் 75 இலட்சம் வரையில் வருமானம் கிடைத்து வந்தது. ஆனால், கடந்த இரு வருடங்களாக குறித்த திணைக்களத்தினால் ஆற்றுமண் கிறவல் அகழ்வதற்கான அனுமதி நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் புவிச்சரிதவியல் அளவைகள் சுரங்கங்கள் திணைக்களத்தால் சகல நடவடிக்கையும் நிறுத்தப்பட்ட பின்பும் மாவட்டத்தில் மணலுக்கோ கிறவலுக்கோ எந்தவிதமான தட்டுப்பாடும் இருக்கவில்லை. அதேவேளை, இந்த மணல் கிடைக்கவில்லை என அபிவிருத்திகள் நிறுத்தப்படவில்லை. இந்நிலையில், இந்தத் தடைகளைத் தாண்டி ஆற்று மண் கிறவல்களை விநியோகித்தவர்கள் யார், இது எங்கிருந்து கொண்டுவரப்பட்டது? அப்படியானால், அரசாங்கத்துக்கு கடந்த முறை நாள் ஒன்றுக்கு கிடைத்த 50 தொடக்கம் 75 இலட்சம் ரூபா வரையிலான வருமானம் யாருக்கு சென்றது. இதனை ஆராயவேண்டியவர்கள் அமைச்சர்களும் அதிகாரிகளும். ஏனென்றால், ஒருவர் ஒரு பிடி மண்ணையும் எடுக்க விடமாட்டேன் எனவும் இன்னும் ஒருவர் மாற்றுக்கருத்தையும் கூறுகின்றனர். அவ்வாறாயின், உங்கள் தடைகளைத் தாண்டி இந்த



மண்ணை விநியோகித்தவர்கள் யார், இதனை யார் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? இந்தக் கேள்விக்கு அதிகாரிகள் விடைகாண முயலுங்கள்.

அதேவேளை, இந்த மணல் நெருக்கடியால் சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே ஒரு கடுமையான கட்டுப்பாடான ஒழுங்கமைப்பை ஏற்படுத்தி ஆற்று மணலை மாவட்டத்தில் இருந்து வெளியே செல்லாதளவுக்கு மாவட்ட மக்களின் தேவைக்கு அளவான மண்ணை விநியோகிப்பதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்க வேண்டும் என்பது எமது கோரிக்கை.

அதேவேளை, அதிகாரப் பரவலாக்கல் இணைந்த வடகிழக்கில் எதிர்பார்க்கின்றோம் என்பதுடன் பிரிந்திருக்கும் கிழக்கில் அதிகாரப் பரவலாக்கல் தமிழர்களுக்கு கத்தி முனையாக இருக்கும். ஏனென்றால், ஒரு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அப்போது அதிகாரப் பரவலாக்கல் பெற்றிருந்தால் கிழக்கு மாகாணத்தில் யார் ஆட்சி அமைப்பார்கள் என்பது ஒரு கத்தி முனைதான்.

இந்நிலையில், காணி, பொலிஸ் அதிகாரம் இருக்கும் வேளையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு தமிழர்கள் அல்லாத இடத்தில் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும் என சிந்தித்துப் பாருங்கள். இது ஒரு விடயம். பிரிந்திருக்கும் கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் அதிகாரம் கிடைக்கப்பெற்று அங்கு பிள்ளையானோ அல்லது சாணக்கியனோ முதலமைச்சராக இருந்தால் எத்தனை பேர் சிறையில் இருப்பார்கள். சிந்தித்துப் பாருங்கள். இது தேவை தானா? அதிகாரம் உரியவர் கையில்தான் இருக்க வேண்டும். இவர்கள் போன்ற இடத்திலே இன்று

இரா. சாணக்கியனுக்கு பொலிஸ் அதிகாரம் இருந்தால் பிள்ளையான் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் சிறையில். அவ்வாறு பிள்ளையானுக்கு பொலிஸ் அதிகாரம் கிடைத்தால் கற்பனை செய்து பாருங்கள். சிறையில் இடம் கூட கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மதில் மேல் பூனை. ஏனென்றால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொலிஸ், காணி அதிகாரங்கள் தரமாட்டேன் என்ற டலஸ் அலகப்பெருமவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. அங்கே அவரை ஆதரித்துவிட்டு இங்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் காணி, பொலிஸ் அதிகாரத்தை கேட்பது புரியவில்லை. இந்நிலையில், மாவட்டத்தில் புதிய மதுபானசாலை திறப்பு தொடர்பாக ஒவ்வொரு அரசியல்வாதியும் நான் சம்பந்தம் இல்லை, அனுமதிக்கமாட்டோம் என்றால் அதற்கு விண்ணப்பித்தவர்கள் யார்? அவர்கள் இரவு பகலாக சில குறிக்கப்பட்ட சில அரசியல் கட்சிகளில் காரியாலயத்திலே நிரந்தரமாக இருப்பவர்கள். இதனை என்னுடைய ஆட்கள் இல்லை என சொல்லி யாராவது எங்களுடன் சவாலுக்கு உட்பட முனைந்தால் நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் செயற்பாடுகள் உலகம் அறிந்தது. இன்று உலகமே வாய்விட்டுச் சிரிக்கின்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம். எனவே, இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுகின்ற அரசியல்வாதிகள் அனைவரும் அறநெறி வகுப்புகளில் சிறுவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் ஒழுக்க நடைமுறையை சிறுவர்களுடன் இருந்து கற்றுவிட்டு கூட்டத்தை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது மற்றும் எதிர்காலத் தேர்தல்களுக்கு முகங்கொடுப்பது சம்பந்தமாக மூதூர் தொகுதி கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலொன்று ஞாயிற்றுக்கிழமை(30) மாலை கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் வருண தகநாயக்க உட்பட கட்சி அமைப்பாளர்கள், முகாமையாளர்கள், உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

**படங்கள்:** *கிண்ணியா செய்தியாளர்*

# நடமாடும் சேவை





*மட்டக்களப்பு செய்தியாளர்*

மட்டக்களப்பு மாவட்ட மண்முனை தென்மேற்கு - பட்டிபளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை சனிக்கிழமை(29) இடம்பெற்றது.

இச்சேவையில் பதிவாளர் கிளையின் சேவைகள், அடையாள அட்டை வழங்கும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், சமுர்த்தி மற்றும் கிராம சேவகர் தொடர்பான சேவைகள், ஆயுர்வேத மருத்துவம், ஏனைய மருத்துவ சேவைகள் என்பன பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. இச்சேவையின் மூலமாக அப்பகுதிவாழ் பொதுமக்கள் பலர் நன்மையடைந்தார்கள். இதன்போது அப்பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் திருமதி மேனகா புவிகுமார், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு மக்களுக்கு அதே இடத்தில் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தமை சிறப்பம்சமாகும்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்பூட்டல் செயலமர்வு



*மட்டக்களப்பு செய்தியாளர்*

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் மூவின மக்களும் மிகுந்த நன்மையடைந்துள்ளதால் அதனை இன்னமும் காத்திரமாக எடுத்துச் சென்று மக்களை விழிப்படைய வைக்கவேண்டுமென காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே.நிஹால் அஹமட் தெரிவித்தார்.

மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றுக்கு சாத்தியமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் சம்பந்தமான விழிப்புணர்வூட்டல் செயலமர்வு அட்டாளைச்சேனையிலுள்ள மனித எழுச்சி அமைப்பு அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணி உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள், காணிகளை இழந்தவர்கள் என பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில், ட்ரான்ஸ்பெரன்சி இன்ரநெஷனல் அமைப்பின் அம்பாறை மாவட்ட திட்ட அலுவலர் எம்.லக்ஸ்மிகாந்த் வளவாளராகக் கலந்து கொண்டு செயலமர்வை நடத்தினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தகவல் அறியும் உரிமைக்கான சேவை மையத்தின் மூலம் இதுவரை சுமார் 750 பேர் சேவைகளைப் பெற்றுள்ளதாகவும் அதில் 400 இற்கும் மேற்பட்டோர் கோரிய தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் வெற்றியளித்து பொதுமக்கள் தகவல்களைப் பெற்றுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில், கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தீர்வின்றித் தொடரும் காணி இழந்தவர்களின் பிரச்சினைகளில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களும் இனிமேல் முன்னெடுக்கவுள்ள விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டன. 13ஆவது அரசியல் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வுகளை முன்னெடுக்கும் முயற்சிகளில் காணி இழந்து பாதிக்கப்பட்ட மக்களின் முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், 200 வருடங்களுக்கு மேலாக இலங்கைக்காக இரத்தம் சிந்தி உழைத்து வரும் மலையக மக்களுக்கு ஆதரவை நல்க வேண்டும் என்ற நோக்கில் இடம்பெறும் ஆதரவுப் பேரணியில் கிழக்கு மாகாண காணி இழந்த முஸ்லிம்களும் இணைந்து கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

# மட்டக்களப்பு - கல்முனை வீதியில் இருவேறு விபத்துகள்

## ஆறு பேர் படுகாயம்

*மட்டக்களப்பு செய்தியாளர்*

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடாவில் ஞாயிற்றுக்கிழமை(30) மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனையிலிருந்து மாங்காய்களை ஏற்றிக்கொண்டு மினுவாங்கொடை நோக்கிச் சென்ற லொறி சாரதியின் அதிக தூக்கம் காரணமாக மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்னால் அமைந்துள்ள மின்கம்பம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக லொறி சேதமடைந்துள்ளதுடன் லொறியின் நடத்துனர் பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீரென மின்கம்பத்தில் மோதியதன் காரணமாக பின்னால் வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் மோட்டார் சைக்கிள் கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில், அதில் இருவர் உட்பட மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ஞாயிற்றுக்கிழமை மாலை அதே மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நாவற்குடாவில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் மூவர் படுகாயடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளில் தாயும் மகனும் பயணித்துள்ளனர். இந்நிலையில், ஊர் பக்கமிருந்து இரும்பு, தகரம் உள்ளிட்ட பொருட்களை வாங்கி வரும் நபர் ஒருவர் திடீரென துவிச்சக்கர வண்டியில் குறுக்கீடு செய்தமையால் இவ்விபத்து சம்பவித்துள்ளதாக இதனை நேரில் அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர். இதில் மோட்டார்சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளதுடன், இவ்விபத்திலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்குறித்த விபத்துச் சம்பவங்கள் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போடியார் புலம்பல்!



*தமிழர்கள் விரும்பும் தீர்வை ஒருபோதும் வழங்கமுடியாதாம் எண்டு பண்டி அமைச்சர் பந்துல குணவர்தன சொல்லிப்போட்டாரு எலுவா...? அப்ப சிங்களவர் விரும்புற தீர்வு என்ன எண்டதையும் ஒள்ளுப்பம் சொல்லுங்கடாப்பா.. உங்களப்போல ஒரு சில இனவாதிகளாலதான் தமிழர்கள் விரும்புற தமிழீழம் மட்டும்தான் கிடைக்கும் எண்டதுதான் உங்கட செயல்கள் நிருபிக்குது எலுவா..? புரிந்தா சரிதான் பந்துல மாமா....!*

# வெற்றியுடன் தொடரை ஆரம்பித்த நடப்பு சம்பியன் ஜவ்னா ஆட்டநாயகனாக யாழ். மண்ணின் வியாஸ்காந்த்



**நா**ன்காவது பருவகாலத்துக்கான எல்.பி.எல் தொடரின் முதல் போட்டியில் நடப்பு சம்பியனான ஜவ்னா கிங்ஸ் அணி 21 ஓட்டங்களால் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியை வீழ்த்தியது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நிரோஷன் டிக்வெல்ல தலைமையிலான கொழும்பு, ஜப்னா கிங்ஸ் அணியை முதலில் துடுப்பாடப் பணித்தனர்.

முதலில் துடுப்பாடிய ஜப்னா கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்துக் கொண்டது. 174 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்கள் மாத்திரம் எடுத்து போட்டியில் தோல்வியைத் தழுவியது.

போட்டியின் ஆட்டநாயகனாக இரு விக்கெட்களை வீழ்த்திய ஜப்னா கிங்ஸ் அணியின் விஜயகாந்த் வியாஸ்காந்த் தெரிவாகினார்.

# நீச்சலில் வரலாறு படைத்த லெடக்கி




**ஜ**ப்பானில் இடம்பெறும் உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் அமெரிக்காவின் கேட்டி லெடக்கி, மகளிருக்கான 800 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று இரு புதிய சாதனைகளை எட்டி வரலாறு படைத்தார்.

உலக சம்பியன் ஷிப்பில் ஒரே பிரிவில் (800 மீட்டர் ஃப்ரீஸ்டைல்) 6 முறை தங்கம் வென்ற முதல் நீச்சல் வீரர் அல்லது வீராங்கனை என்ற பெருமை பெற்றார். மேலும், உலக சம்பியன்ஷிப் தனிநபர் பிரிவில் தனது 16ஆவது தங்கப் பதக்கத்தை வென்ற அவர், சக அமெரிக்கரான மைக்கேல் பெல்ப்ஸை (15 தங்கம்) முறியடித்து, உலக சாம்பியன்ஷிப்பில் தனிநபர் பிரிவில் 16 தங்கம் வென்ற ஒரே நீச்சல் போட்டியாளர் என்ற வரலாற்றை பதிவு செய்தார்.

நடப்பு சம்பியன்ஷிப்பில் ஏற்கெனவே 1,500 மீட்டர் ஃப்ரீஸ்டைலில் தங்கம் வென்றவருக்கு இது 2ஆவது தங்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## விளையாட்டுத் துளிகள்

பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரில் கொலம்பியாவிடம் 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

★★★★★★★★★★

பிலிப்பைன்ஸை எதிர்கொண்ட நோர்வே அணி 6-0 என பந்தாடியது. சோஃபி ரோமன் ஹூக் 3 கோல்கள் அடித்தார். இதன் மூலம் நோர்வே இரண்டாவது இடத்தைப் பிடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

★★★★★★★★★★

சுவிட்சர்லாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதிய போட்டி 0-0 என டிராவில் முடிந்தது. இந்த முடிவினால் புள்ளிகள் அடிப்படையில் சுவிட்சர்லாந்து அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. நியூசிலாந்து அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்து தொடரை விட்டு வெளியேறியது.

★★★★★★★★★★

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் அதி சிறந்த மெய்வல்லுனர் வீரராக 400 மீட்டர் வீரர் காலிங்க குமாரகேவும் அதி சிறந்த மெய்வல்லுனர் வீராங்கனையாக 800 மீட்டர் வீராங்கனை கயந்திகா அபேரத்னவும் தெரிவாகினர்.

# ஒலுவில் இலவன் ஸ்டார் அணி சம்பியன்

*அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்*

துறைநீலவாணை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய நாகேந்திரன் ஞாபகார்த்த மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அணிக்கு 9 பேர் கொண்ட 5 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் 64 கழகங்கள் பங்கு கொண்டன. இதன் இறுதிப் போட்டி துறைநீலாவணை மத்திய விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (22) இரவு இடம்பெற்றது.

இலவன் ஸ்டார் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 39 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழக அணி 32 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. இவ் வெற்றியின் மூலம் ஒலுவில் இலவன் ஸ்டார் அணி இரு தடவை நாகேந்திரன் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

## இன்றைய போட்டிகள்

LPL T20
LANKA PREMIER LEAGUE 2023

ஜவ்னா எதிர் தம்புள்ள (பி.ப - 3.00)
கண்டி எதிர் காலி (இரவு - 7.00)

# மாகாண போட்டிகளில் கலந்து கொள்ள கல்முனை பஹ்ரியாவில் இருந்து 20 வீரர்கள் தெரிவு



*மாளிகைக்காடு நிருபர்*

கல்முனை கல்வி வலய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் கல்முனை கமு/அல்-பஹ்றியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) 20 மாணவ மாணவிகள் வெற்றியீட்டி கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலய மாணவ மாணவிகள் எதிர்வரும் 19.09.2023 இல் இடம்பெறவிருக்கின்ற மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.









2023 ஆம் ஆண்டுக்கான எல்.பி.எல் தொடரின் ஆரம்ப விழா நேற்று முன்தினம் கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கோலாகலமான முறையில் நடைபெற்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7